கம்பன் மலர்



கம்பன் கழகம் புதுக்கோட்டை

கழக வளர்ச்சிக்கு வைப்பு நிதி வழங்கிய சான்றோர்

இந்தியன் வங்கி, சென்னை.	ரூ. 10,000
ஜனாப் **AR.** நூர்முகமது, புதுக்கோட்டை.	ரூ. 3,000
திரு. **YSTL.** சிதம்பரம் செட்டியார், குழிபிறை.	ரூ. 2,000
திரு. வானதி திருநாவுக்கரசு, சென்னை.	ரூ. 1,000
திரு. ம. கந்தையா, சித்ரா ஜவுளிஸ்டோர், புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. அமரர் புலவர் இரா.கறுப்பையா B.A., RDO., புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. புலவர் தி.சு. மலையப்பன் M.A., B.Ed., புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. **Rtn. SR.** ஜானகிராமன், புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. அமரர் சுப. மாணிக்கம், புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. **K.** வேங்கடாச்சாரி B.A., CIIB கடையக்குடி.	ரூ. 1,000
திரு. **S.** கிருஷ்ணமூர்த்தி, செயலர் கம்பன் கழகம், இராசிபுரம்.	ரூ. 1,000
திரு. புலவர் இரா. சந்திரசேகரன் M.A., B.Ed., புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. **Dr. M.** தங்கவேலு, புதுக்கோட்டை.	ரூ. 1,000
அமரர் தவத்திரு சாயிமாதா பிருந்தாதேவி, புதுக்கோட்டை.	ரூ. 1,000
திரு. இராமலிங்கம் முருகபக்தர், சிலட்டூர்.	ரூ. 501
திரு. அமரர் பழனியப்ப செட்டியார், ஆலங்குடி.	ரூ. 501
திரு. சீனி. சின்னப்பா, பேக்கரிமகராஜ், புதுக்கோட்டை.	ரூ. 501
திரு. கே. இராமையா (PCC வங்கி) புதுக்கோட்டை.	ரூ. 500

1999 கம்பன் விழாச் சிறக்க உதவிய சான்றோர்

நிகழ்ச்சிஏற்பு

இந்தியன் வங்கி, சென்னை.

பாரத ஸ்டேட் வங்கி, சென்னை.

மாலைமுரசு , தமிழாரறிஞர் பா. இராமச்சந்திர ஆதித்தன்

அன்னக்கிளி அம்மாள் அறக்கட்டளை சார்பாக S.R.S. ரெத்தினசாமி நாடார் குடும்பத்தார்

மாண்புமிகு இராம. வீரப்பன், சென்னை.

திரு. AVM நல்லையா, புதுக்கோட்டை

திரு. கே. வேங்கடாச்சாரி B.A., CIIB, கடையக்குடி.

பிற வகை உதவிகள்

சோடா, கலர் பானங்கள் : டிங்டாங் நிறுவனம் திரு. அஞ்சுகா மீனாட்சிசுந்தரம்

அழைப்பிதழ்கள் : காசிகார்ட்ஸ் அழைப்பிதழ் உலகம்

சுவரொட்டிகள் : பேக்கரி மகராஜ் சீனி. சின்னப்பன்

போட்டிப் பாடல்கள் அச்சு : வீர. காசிவிசுவநாதன், மதராஸ் ரிப்பன் அச்சகம்.

படங்களுக்கு மாலை, மலர் : Dr. சி. கோவிந்தராசன் B.A., புதுக்கோட்டை.

காபி, டீ : திரு. கரு. சுகுமாரன், புதுக்கோட்டை.

துண்டுகள் : திரு. MR. மாணிக்கம், ஒப்பந்தகாரர், புதுக்கோட்டை.

கேடயம் : திரு. கறு. இராமசாமி M.Com.,

போட்டி நடுவர்களுக்கு
சிற்றுண்டி : திரு. & திருமதி. P. கருப்பையா, PSK மேல்நிலைப்பள்ளி.

போட்டிக்கான பரிசுகள் : பாரத் ஸ்டேட் வங்கி, புதுக்கோட்டை.

நுழைவாயில்

சொன்னால் வாய் மணக்க, படித்தால் மனம் இனிக்க, நினைத்தால் நெஞ்சுகுளிர, வாழ்வியல் நெறிகாட்ட வாய்த்த நூல்கள் சிலவே. அவற்றுள் அறத்தை, அன்பை, மானுட நேயத்தை, பண்பை பறை சாற்றும் காப்பியம் இராமகாதை என்பதை அறிவோம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் கைதூரிகைபட்டு மானுட மாண்பு மெருகேற, தொட்ட தொட்ட இடமெல்லாம் தேன்சுவை கூட்டும் காப்பியம் இராம காப்பியம். கற்பனை வளம், பல்துறை அறிவு, கனித்தமிழ் இனிமை, காப்பியப் போக்கு, பண்பாட்டுத்திறன், உலகளாவிய உயர் நோக்கு இவையெல்லாம் அறிந்து கம்பன் கல்லாத கலை இல்லை, வேதக்கடல் இவன் எனவியக்கின்றோம்.

சோலைசூழ் அரங்கத்துள் பள்ளிகொண்ட பரந்தாமன் முன் விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் 4ம் நாள் அஸ்த நட்த்திரத்தில் *(22.2.886)* இராமகதையை அரங்கேற்றினான் கம்பன். இக்கதையின் மாண்பை உணந்தோர் இக்காப்பியத்தை உருசிய, சீனமொழி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மக்கள் மத்தியில் நடமாட விட்டனர்.

தமிழகத்தில் காந்திய நெறியாளர், கம்பன் பேறிஞர் அமரர் கம்பனடிப்பொடி அவர்கள் *1938* இல் முதல் முதலில் கம்பன் கழகத்தைத் தோற்றுவித்தார். கம்பன் கடல் மூழ்கி முத்தெடுத்த சான்றோர். முதுபெரும்புலவர் மு. இராகவஅய்யங்கார், ரசிகமணி டி.கே.சி, வெள்ளைக்கால் சுப்பிரமணிய முதலியார், சமுதாயச்சிற்பி தோழர் ஜீவா, தமிழக்கடல் ராய.சொ., சைவப் பேரறிஞர் முரு.பழ. இரத்தினம் செட்டியார், பண்பாட்டுச்சிகரம் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன், சிலேடைச் செல்வர் கிவா.ஜகந்நாதன் உயர்நீதிபதி மகராஜன், கம்பன்புரவலர் கம்பனடிப்பொடி சா. கணேசன், அரசுப்பணியிலும் அண்ணல்இராமன் புகழ்பரப்பிய அமரர் அ. கிருஷ்ணசாமி செட்டியார் போன்றோர் கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்த்தனர்.

இறை நம்பிக்கை, மொழிப்பற்று, நாட்டுணர்வு, சமுதாய உணர்வு கவிவளம், பொருட் சுவை பரம்பும் திருத்தூதராம் செயலாற்றும் இக்கழகம் *1976*ல் தொடங்கப் பெற்று ஆண்டுதோறும் சூலைத் திங்களில் கம்பன் விழாவும், மாதந்தோறும் இலக்கியக் கூட்டங்களும் நடத்தி மக்கள் அறிவுப்பசியை ஆற்றிவருகிறது.

இளம் உள்ளங்களில் எழுச்சியூட்டும் வண்ணம் மனனம் செய்து ஒப்புவித்தல், பேச்சு, கட்டுரைப் போட்டிகளை மழலையர் முதல் கல்லூரி நிலை வரை

நடாத்திப் பராட்டி பரிசளித்து ஊக்குவிக்கிறது. ஆண்டுதோறும் அழகிய மலரினை கருத்துக் கருவூலமாய் கம்பரசிகர்கரங்களில் தவழ விடுவதில் பெருமிதமடைகிறோம்.

மலர்மணம் வீச கட்டுரை வழங்கும் அன்பர்களுக்கும், விளம்பரம் தந்து உதவிடும் வணிகர்களுக்கும் விழாச்செலவை ஏற்கும் செந்தமிழ் சான்றோர்கட்கும், மாதக்கூட்டச் செலவுகளை ஏற்றிடும் புரவலர்களுக்கும், வார்த்தையால் நன்றி வழங்கிட இயலுமா? இதயம் இருப்போர் அவர்கள்.

இவ்வாண்டு கம்பன் மாமணிவிருதை பெரும்புலவர், தமிழ்க்கடல் வித்வான் தி.வே.கோபாலய்யர் அவர்களுக்கு வழங்கி மகிழ்கிறோம்.

கம்பன் விழாமலர் சிறக்க விளம்பரங்கள் பெற்றுத்தந்த திருவாளர்கள் சி. இராமச்சந்திரன், தி.சு. மலையப்பன், எஸ். ஆர். ஜானகிராமன், சி. கோவிந்தராசன், G.V. சுப்பிரமணியன், கறு. இராமசாமி M.Com., வீர. காசிவிசுவநாதன் ஆகியோருக்கு நன்றி.

இவ்வாண்டு விழாச் சிறக்க நிகழ்ச்சிகளை ஏற்பு செய்த இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, மாலை முரசு மேலாண்மை இயக்குநர், தமிழறிஞர் பா. இராமச்சந்திர ஆதித்தன், மாண்புமிகு இராம.வீரப்பன், புரவலர் திரு. K. வேங்கடாச்சாரி, அன்னக்கிளி அம்மாள் அறக்கட்டளை, திரு. S.R.S. ரெத்தினசாமி நாடார் குடும்பத்தார், திரு. A.V.M. நல்லையா ஆகியோர்கட்கு எங்கள் இதயபூர்வமான நன்றி.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளித்துப் பாராட்டும் புதுக்கோட்டை பாரத ஸ்டேட் வங்கிக்கு நன்றியினை நவில்கிறோம்.

கம்பன் புகழ்பாட, கன்னித்தமிழ் வளர்க்க ஒல்லும்வகையெல்லாம் உதவும் உயர் உள்ளங்களுக்கு என்றும் கடப்பாடுடையோம்.

கருத்துப்பெட்டகமாய் மலரை உங்கள் கைகளில் தவழ விடுகிறோம். சுவையுங்கள். இலக்கியப்பணி, இன்தமிழ்ப்பணி, சமுதாயப்பணி ஆகியவற்றை இறைபணியாய் செய்துவரும் இக்கழகம் வளர ஆக்கமும் ஊக்கமும் நல்கிட வேண்டுகிறோம்

கம்பன் வாழ்ந்தால் தமிழ் வாழும் - தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்.

புதுக்கோட்டை
2.4.7.99

அன்புடன்
கம்பன் கழகத்தார்

உள்ளடக்கம்

1998 - 99 ஆம் ஆண்டு மாதக் கூட்டங்கள்

நாள்	நினைவுக்கூட்டம் திருவாளர்கள்	தலைவர் திருவாளர்கள்	பேச்சாளர் திருவாளர்கள்	நன்கொடையாளர் திருவாளர்கள்
23.8.98	சுப. மாணிக்கம்	சு. ராமையா	அ. அறிவொளி	மா. ஜெய்கணேஷ்
20.9.98	இரா. கறுப்பையா	Rtn. பழனியப்பன்	இரா. அன்பழகன்	கறு. இராமசாமி
18.10.98	காந்தியடிகள்	காசிவிசுவநாதன் I.P.S.	த. ராஜாராம்	சி. இராமச்சந்திரன்
22.11.98	வாரியார் சுவாமிகள்	M. நெடுஞ்செழியன்	மெய்யாண்டார்	கமலாசனம் B.E.,
20.12.98	சண்முகம்	Rtn. M. ராமசாமி	சிவ. கைலாசநாதன்	வெள்ளைச்சமி
17.1.99	இரா. இராதாகிருஷ்ணன்	S. பிருதிவிராஜ்	இராம. சிவஞானம்	ம.கந்தையா
21.2.99	கம்பன் அடிப்பொடி	R. ராஜலெட்சுமி நெடுஞ்செழியன்	வெ. சாரதா	தி.சு.மலையப்பன்
21.3.99	பாலகிருஷ்ணன் சேர்வை	விஜயரவி பல்லவராயர்	த. அகரமுதல்வன்	தமயந்திபாலகிருஷ்ணன்
18.4.99	அகிலன்	K.K. அப்துல்காதர்	V. தமிழ்சேரனார்	K. வேங்கடாச்சாரி
16.5.99	நடேச அம்பலகாரர்	ஆ. முனியாண்டி M.A.,	ப. நமசிவாயம்	K. இராமையா
20.6.99	மருத்துவர் VK இராமச்சந்திரன்	முத்து கிருஷ்ண நாயுடு	பழ. முத்தப்பன்	சி. கோவிந்தராசன்

ஆயுள் உறுப்பினர் பட்டியல்

எண்	உ. எண்	பெயர்
		திருவாளர்கள்
1.	12	**K.A. அடைக்கலம்,** மணியம்பலம்
2.	162	**M.A. அடைக்கலம்,** 40-D2, காந்திசாலை, ஆலங்குடி.
3.	113	**Rtn. T. அசோகன்,** பேக்கர்ஸ் ஆப் இந்தியா, சிப்காட் புதுக்கோட்டை.
4.	109	**Rtn. PP. அண்ணாத்துரை,** செயலர், வர்த்தகர்கழகம், புதுக்கோட்டை.
5.	270	**அப்துல் ஹசன்,** வருவாய்த்துறை.
6.	185	**கவிமாமணி கா.ந. அரங்கராசன்,** L.C.E. கரூர்.
7.	20	**S. அய்யாச்சாமி,** M.A., M.Ed., கல்வித்துறை, (ஒய்வு)
8.	27	புலவர் **க. அரிதீர்த்தம்,** பெரம்பூர், அண்டக்குளம் அஞ்சல்.
9.	167	**S. அருணகிரி,** B.Com., PCC வங்கி, புதுக்கோட்டை.
10.	133	கோடீஸ்வரா **S. அழகப்பன்,** ராயல் பிளாசா, புதுக்கோட்டை.
11.	252	**பெ. அழச்சியப்பன்,** மிரட்டுநிலை, அரிமளம் (வழி)
12.	149	**Rtn. அன்பரசன்,** NTR ஆங்கிலப்பள்ளி, மார்த்தாண்டபுரம்.
13.	89	**Rtn. S. ஆண்டியப்பன்,** சோனா மீனா தியேட்டர், திருச்சி.
14.	250	**ஆண்ட்ருசாலமன் ராசேந்திரன்,** பாங்க் ஆப் மதுரை, புதுக்கோட்டை.
15.	30	புலவர் **பெ. ஆறுமுகம்,** எம்.ஏ.பி.எட், 3021, கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை.
16.	158	**S. ஆறுமுகம்,** பூமத்தான்பட்டி, பூவரசகுடி அஞ்சல்.
17.	179	**PM. ஆறுமுகம்,** பி.ஏ., 4563, கீழ 4ம் வீதி, புதுக்கோட்டை.
18.	16	**சி. இராமச்சந்திரன்,** துணைத் தலைவர் கம்பன் கழகம் வல்லத்திராக்கோட்டை 622 303.
19.	17	**மெ. இராமச்சந்திரன் செட்டியார்,** தேரோடும் வீதி, ஆலங்குடி.
20.	34	புலவர் **ந. இராமச்சந்திரன்,** 2200 பெரியார் நகர், புதுக்கோட்டை.
21.	67	**ஜெனித் ஆர். இராமச்சந்திரன்,** பிரகதாம்பாள் திரையரங்கம், புதுக்கோட்டை.
22.	40	**கே. இராசமாணிக்கம்,** பவானி ஆயில் மில்ஸ், ஆலங்குடி.
23.	65	**R. இராசகோபாலய்யங்கார்,** கிருஷ்ணா காபி ஒர்க்ஸ், புதுக்கோட்டை.
24.	74	**இராசகோபாலன்,** ராம்நகர் 2ம் வீதி, புதுகை.
25.	235	**K.T. இராசகோபாலன்,** வருவாய்த்துறை, (ஒய்வு) அபிராமி நகர், திருக்கோகர்ணம்.
26.	71	**ந. இராமசாமி ஆச்சாரியார்,** புத்தாம்பூர்.
27.	245	**கறு. இராமசாமி,** 83 தெற்கு 3ஆம் வீதி, புதுக்கோட்டை.
28.	95	புலவர் **இரா. இராமமூர்த்தி,** எம்.ஏ.பி.எட், பெருமாள் கோயில் சந்து, புதுக்கோட்டை.
29.	217	**K. இராமமூர்த்தி,** வருவாய்த்துறை.
30.	100	**R. இராமையா B.A.,** தலைவர் நுகர்வோர் குழு 263A நிஜாம் காலனி, புதுக்கோட்டை.
31.	174	**K. இராமையா B.A.,** வங்கித்துறை (ஒய்வு) வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, புதுக்கோட்டை.
32.	110	**S. இராமலிங்கம் முருகபக்தர்,** சிலட்டூர்.
32A	265	**இராமையா,** பிருந்தா மெடிக்கல்ஸ், புதுக்கோட்டை.

33.	236	**ERM. இராமலிங்கம், B.A., B.L., சார்லஸ் நகர், புதுக்கோட்டை.**
34.	126	**Rtn. PP. S. இராமன் செட்டியார், B.Com., வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை.**
35.	26	**G. இராதாகிருஷ்ணன், B.E., நெடுஞ்சாலைத்துறை, ஓய்வு.**
36.	28	**இராமதாசு, I.A.S. (ஓய்வு) சென்னை**
37.	142	**A. இராமகிருஷணன், சரஸ்வதி இல்லம், மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.**
38.	239	**இராமகிருஷ்ணன், தினமலர் செய்தி சேகரிப்பாளர், புதுக்கோட்டை.**
39.	146	**இராசாராம், B.E., 1119 ராசகோபாலபுரம், புதுக்கோட்டை.**
40.	173	**S. இராசரத்தினம், சென்னை.**
41.	183	**S. ராகவேந்திரன், குலபதிபாலையா பள்ளி, புதுக்கோட்டை.**
42.	204	**M.A. இராசேந்திரன், ஹோலிகிராஸ் பள்ளி, ஆலங்குடி.**
43.	258	**M. இராசாமுகமது, ராஜா எலக்டிரிகல்ஸ், புதுக்கோட்டை.**
44.	192	**A. இராசசேகரன், B.Sc. திருச்சி.**
45.	22	**R. இலக்குமணன், எம்.எஸ்ஸி, எம்.எட், அ.மே.நி.(ம) பள்ளி, ஆலங்குடி.**
45A	266	**சுப. உலகப்பன், ஆடிட்டர், புதுக்கோட்டை.**
46.	59	**ந. கண்ணன், ஆசிரியர் மணியம்பலம், பூவரசகுடி.**
47.	163	**புலவர் அன்புகணபதி, ஒத்தைத்தெரு, திருக்கோகர்ணம், 622 002.**
48.	229	**A. கணபதி, சேர்வை, சென்னை.**
49.	92	**R.K. கணேசன், புதுக்கோட்டை.**
50.	249	**கணேசன், PCC வங்கி, மகளிர் பிரிவு, புதுக்கோட்டை.**
51.	212	**I. கணேச பாண்டியன், சென்னை.**
52.	144	**Rtn. PP. S. கதிரேசன், ஸ்ரீராம் மெட்டல்ஸ், புதுக்கோட்டை. 622 004.**
53.	152	**Rtn. PP. RMV. கதிரேசன், சோலார் பெயிண்ட், புதுக்கோட்டை.**
54.	264	**N. கதிரேசன் செட்டியார், மார்த்தாண்டபுரம்.**
55.	3	**ம. கந்தையா, தலைவர் கம்பன் கழகம், புதுக்கோட்டை.**
56.	157	**Er. கமலாசனம், மின்வாரியம், கணேச நகர், புதுக்கோட்டை.**
57.	33	**Rtn. P. கருப்பையா, PSK மேல்நிலைப்பள்ளி, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை.**
58.	86	**இரா. கருப்பையா, இடையபட்டி 622 004.**
59.	188	**V. கருப்பையா, ரைஸ்மில், வல்லத்திராக்கோட்டை.**
60.	84	**Dr. A. கருணாநிதி, MD. புதுக்கோட்டை.**
61.	43	**கல்யாண சுந்தர சாஸ்திரிகள், இராமேஸ்வரம்.**
62.	156	**J. கலிபுல்லா, தலைவர் குலபதி பாலையா பள்ளி, புதுக்கோட்டை.**
63.	21	**கனகராசன், PKR சவுண்ட் சர்வீஸ், புதுக்கோட்டை.**
64.	172	**G. கனகசபை, தலைவர், அறநெறிக்கழகம், லால்குடி.**
65.	195	**Dr. கன்னிகா சேகர், M.B.B.S., மலேசியா.**
66.	82	**கவிஞர் VK. கஸ்தூரி நாதன் M.A., B.Ed., குழிபிறை.**
67.	1	**S.T. காசிராஜன், I.A.S., சென்னை.**
68.	4	**வீர. காசிவிசுவநாதன், LPT மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.**
69.	129	**A. காதர்பாட்சா, பிரின்ஸ் வாட்ஜ், புதுக்கோட்டை.**

70.	106	S. காளிதாஸ், M.A., M.Phil., ஆபிசீஅ கல்லூரி, திருப்பத்தூர்.
71.	257	N. கிரீசன், 49, இராம்நகர் 4ம் வீதி, புதுக்கோட்டை.
72.	107	S. கிருஷ்ணமூர்த்தி, செயலர் கம்பன் கழகம், இராசிபுரம்.
73.	128	புலவர் சு. கிருஷ்ணமூர்த்தி, நற்சாந்துபட்டி.
74.	173	K. கிருஷ்ணமூர்த்தி, குடும்ப நலத்துறை (ஓய்வு) கோனாா காலனி, புதுக்கோட்டை.
75.	220	சீ. கிருஷ்ணமூர்த்தி, வருவாய்த்துறை, 240 ஹவுசிங் யூனிட், ராசகோபாலபுரம்.
76.	254	S. கிருஷ்ணமூர்த்தி M.A., M.Ed., ஒனான்குடி சத்திரம், அரிமளம்.
77.	61	ப. குணசேகரன், B.Sc., வடகாடு.
78.	246	வே. குணசீலன், அரசு உயர்துவக்கப்பள்ளி, புதுக்கோட்டை.
79.	51	Rtn. RA. குமாரசாமி, ராஜ சிட்பண்ட், புதுக்கோட்டை.
80.	112	Rtn. T. குமாரராஜா, பேக்கர்ஸ் ஆப் இந்தியா, புதுக்கோட்டை.
81.	78	R. குருமூர்த்தி, வசந்தா ஸ்டோர், கீழராச வீதி, புதுக்கோட்டை.
82.	180	SM. குழந்தைவேலு, வளர்மதி ஏசன்ஸி, வல்லத்திராக்கோட்டை.
83.	267	KL. குழைந்தையன் செட்டியார், ஸ்டாம்பு வெண்டர், புதுக்கோட்டை.
84.	154	A.J. கென்னடி M.Sc., மதர்தெரசா ஆங்கிலப் பள்ளி, புதுக்கோட்டை.
85.	36	கு. கோபாலகிருஷ்ணன், ஆசிரியர், கீழ 3ம் வீதி, புதுக்கோட்டை.
86.	75	Dr. கோபண்ணா M.S., வடக்கு ராச வீதி, புதுக்கோட்டை.
87.	118	Rtn. G. கோபால், எக்ஸல் பிஸ்கட், புதுக்கோட்டை.
88.	251	R. கோபாலன் M.A., B.Ed., H.5, குறிஞ்சிநகர், மேட்டுப்பட்டி கேட்.
89.	14	Dr. சி. கோவிந்தராசன் B.A., EIMP இராம் நகர் 4ம் வீதி, புதுக்கோட்டை.
90.	165	ந. கோவிந்தராசன், பாலாஜி ஹார்டுவேர் மார்ட், புதுக்கோட்டை.
91.	138	V. கோவிந்தராசன், வல்லத்திராகோட்டை.
92.	203	Dr. C. கோவிந்தராசன், அம்பாள் கிளினிக், ஆலங்குடி.
93.	97	G. சங்கரநாராயணன், புதுக்கோட்டை.
94.	225	சங்கரசுப்பு, வருவாய்த்துறை.
95.	64	Dr. K. சண்முகசுந்தரம், M.S. புவனா நர்சிங் ஹோம், புதுக்கோட்டை.
96.	238	J. சண்முகம், 6 முதல் வீதி, PVC நகர், புதுக்கோட்டை.
97.	87	சுப. சண்முகம், மணியம்பலம்.
98.	241	வே. சண்முகம், தொடக்கப்பள்ளி, வல்லத்திராகோட்டை.
99.	8	Dr. சோ. சத்தியசீலன், M.A., P.hd., 55 சேதுராமன்பிள்ளை காலனி, திருச்சி 620 020.
100.	29	புலவர் இரா. சந்திரசேகரன் M.A., B.Ed., இராம்நகர் முதல்வீதி, புதுக்கோட்டை.
101.	90	Rtn. R.K. சந்திரகுப்தா, புதுக்கோட்டை.
102.	96	புலவர் இரா. சந்திரா, அரசு மேல்நிலைப்பள்ளி, வல்லத்திராக்கோட்டை.
103.	120	சந்திரா, குடும்பநலத்துறை, புதுக்கோட்டை.
104.	182	ஹாஜி சபியுத்தீன், கிரவுன் சாக்லட், அம்பாள்புரம், புதுக்கோட்டை.
105.	191	ரா. சம்பத்குமார், M.A., செயலர் திருவருள் பேரவை, வல்லத்திராகோட்டை.
106.	262	KR. சாந்தமூர்த்தி, சோதிடர், 5200.2 தஞ்சாவூர் சாலை, புதுக்கோட்டை.
107.	210	P. சாரதா, ஆசிரியை சக்கரவர்த்தி அய்யங்கார் சந்து, புதுக்கோட்டை.

108	177	சிவகுமார், இராமநாதபுரம்.
109	237	ரெ. சிதம்பரம், 7 கண்ணகி தெரு, ஆலங்குடி.
110.	223	சாமி. சிவஞானம், M.A., வருவாய்த்துறை, (ஒய்வு) தஞ்சாவூர்.
111.	121	சிவசண்முகம், முதலியார் சில்க் பாலஸ், புதுக்கோட்டை.
112.	145	Rtn. சிவநடராசன், நடராசா இன்டஸ்டிரிஸ், புதுக்கோட்டை.
113.	122	ச. சிவசங்கரன், ஆசிரியர், அண்டக்குளம்.
114.	151	புலவர். சிவ சுப்பிரமணியம், லட்சுமி ஆங்கிலப்பள்ளி, புதுக்கோட்டை.
115.	211	புலவர். சிவநேசன், M.A., B.Ed., திருமயம்.
116.	147	Rtn. சீனி. சின்னப்பன், பேக்கரி மஹாராஜ், புதுக்கோட்டை.
117.	256	சீராளன், இராசகோபால் இல்லம், கோயில்பட்டி.
118.	18	V. சீனிவாச ராகவன்
119.	31	BN. சீனிவாசன், தஞ்சாவூர்.
120.	41	சாமி. சீனிவாசன், தங்கபிரகாஷ் ஜீவல்லரி, புதுக்கோட்டை.
121.	79	எஸ். சீனிவாச ரெட்டியார், ஹோட்டல் சிவசக்தி கணேஷ், தலைவர் ஜனக்கல்யாண்.
122.	248	SR. சீனிவாசன், ராம்நகர் 2ம் வீதி, புதுக்கோட்டை.
123.	101	பெ. சுந்தரம், ஆசிரியர், வல்லத்திராக்கோட்டை.
124.	48	ந. சுந்தரம் ஆச்சாரியார், புதுக்கோட்டை.
125.	117	R. சுந்தரராசன், எக்ஸல் பிஸ்கட், சிப்காட், புதுக்கோட்டை.
126.	228	TAS. சுப்பிரமணியம், வருவாய்துறை, ஆலங்குடி.
127.	5	G.V. சுப்பிரமணியம், வருவாய் அலுவலர், (ஒய்வு) 17 N.G.O. காலனி, புதுக்கோட்டை.
128.	175	R. சுப்பிரமணியம், புதுவயல்.
129.	141	RA. சுப்பையா அம்பலம், பூவரசகுடி.
130.	153	Dr. S. சுப்பையா M.B.B.S., செந்தில் மருத்துவமனை, புதுக்கோட்டை.
131.	169	புலவர். R. சுப்புலட்சுமி, M.A., திருச்சி.
132.	60	கரு. சுகுமாரன், 68 புதுத்தெரு, திருக்கோகர்ணம் 622 002.
133.	68	K. சுகுமாரன் B.Sc., கீழ 4ம் வீதி, புதுக்கோட்டை.
134.	73	Dr. M. சுவாமிநாதன், பொன்மலை, திருச்சி.
135.	232	A. சுவாமிநாதன், செல்லுகுடி.
136.	148	கவிஞர் சுவாதி, 27 பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் 622 002.
137.	25	N. செயராமன், அரிசிவியாபாரம், புதுக்கோட்டை.
138.	227	Dr. N. ஜெயராமன், BDS பல்மருத்துவர், புதுக்கோட்டை.
139.	45	குழ. செல்லையா B.A., (Ex. MLA) பேராவூரணி.
140.	218	R. செல்வராசு, கலைமகள் பேப்பர் ஸ்டோர், புதுக்கோட்டை.
141.	98	G. செல்வராசன், சாந்தநாதபுரம், புதுக்கோட்டை.
142.	150	G. செல்வரத்தினம், வடகாடு.
143.	140	Lns. PP. PVR. சேகர், PVR டிபார்ட் மெண்டல் ஸ்டோர், புதுக்கோட்டை.
144	93	Rtn. PP. R. சேவியர், தலைவர், வர்த்தக கழகம், புதுக்கோட்டை.
145	102	Rtn. PP. PL. சொக்கலிங்கம், ஒப்பந்தக்காரர், தெற்கு 4ம் வீதி, புதுக்கோட்டை.

146.	*230*	**Rtn. B. சொக்கலிங்கம்**, கணேஷ்நகர், புதுக்கோட்டை.
147.	*49*	**சோலைமலை**, புதுக்கோட்டை.
148.	*58*	**Rtn. PP. MR. சோலையப்பன்**, தங்கமாளிகை, புதுக்கோட்டை.
149.	*85*	**சையது பாவா**, புதுக்கோட்டை.
150.	*260*	**புலவர் அ. அ. ஞானச்சுந்தரத்தரசு** M.A., M.Ed., *14*, முத்துக்கருப்பகோனார் நகர், புதுக்கோட்டை.
151.	*114*	**Rtn. ஞானப்பிரகாசம்**, பேக்கர்ஸ் ஆப் இந்தியா, புதுக்கோட்டை.
152.	*219*	**தனசேகரன்**, சுபபாரதி பைனான்ஸ், புதுக்கோட்டை.
153.	*47*	**Dr. தங்கவேலு M.B.B.S.**, புதுக்கோட்டை.
154.	*193*	**தமயந்தி பாலகிருஷ்ணன்**, மார்த்தாண்டபுரம்.
155.	*216*	**புதுகை மு. தருமராசன்**, துணைத்தலைவர், பாரதஸ்டேட் வங்கி அலுவலர் சங்கம், சென்னை.
156.	*54*	**மெ.அ. தனபால் செட்டியார்**, நகைவியாபாரம், ஆலங்குடி.
157.	*184*	**VSKS. தனுக்கோடி**, *3246*, தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை.
158.	*143*	**தனிஸ்லாஸ்**, ஆலங்குடி.
158A	*268*	**புலவர். ச.கோ. தமிழ்மாறன், M.A., B.Ed.**, *338*, சத்தியமூர்த்தி நகர், புதுக்கோட்டை.
159.	*108*	**KP. தாமோதரன்**, ஹோட்டல் காவேரி, புதுக்கோட்டை.
160.	*32*	**சே. தியாகராசன்**, புதுக்கோட்டை.
161.	*62*	**க. தியாகராசன்**, மாங்காடு, வடகாடு அஞ்சல்.
162.	*66*	**R. தியாகராசன்**, டெலிபோன்ஸ், காமராசபுரம், புதுக்கோட்டை.
163.	*124*	**A. தியாகராசன்**, புதுக்கோட்டை.
164.	*160*	**Er. R. திருநாவுக்கரசு**, மின்வாரியம், புதுக்கோட்டை.
165.	*244*	**திலகம்**, திருவள்ளுவர் நகர், புதுக்கோட்டை.
166.	*209*	**M. தில்லைக்கரசி**, ஆசிரியர் சக்கரவர்த்தி அய்யங்கார் சந்து, புதுக்கோட்டை.
167.	*70*	**பழ. துரைராசு**, நூலகர் அரிமளம்.
168	*123*	**எஸ். தெட்சணாமூர்த்தி**, *13* சிவானந்தபுரம் 3ம் வீதி, புதுக்கோட்டை.
169.	*205*	**தெட்சணாமூர்த்தி என்ற VN. சிதம்பரம்**, விராச்சிலை.
170.	*52*	**VAPJ. தென்றல்**, முகில்ஹார்டுவேர் மார்ட், புதுக்கோட்டை.
171.	*127*	**மு. தென்னரசு**, சக்தி ஜுவல்லரி, புதுக்கோட்டை.
172.	*38*	**அ. தேவராசன்**, புதுத்தெரு, திருக்கோகர்ணம் *622 002.*
173.	*23*	**K.K. நடராசய்யர்**, தலைவர் கம்பன்கழகம், காஞ்சிபுரம்.
174.	*94*	**S. நடராசன், B.Com.**, வங்கித்துறை (ஓய்வு) கணேஷ்நகர், புதுக்கோட்டை.
175.	*199*	**நடேசன் செட்டியார்**
176.	*37*	**எஸ். நாகரத்தினம்**, டெய்லர், புதுக்கோட்டை.
177.	*69*	**K. நாராயணன்**, புதுக்கோட்டை.
178.	*240*	**Er. AL. நாராயணன்**, மின்வாரியம், புதுக்கோட்டை.
179.	*221*	**M. நாராயணன், B.A.**, வருவாய்த்துறை, திருமயம்.
180.	*116*	**Rtn. R. பத்மநாதன்**, ஸ்ரீராம்சைட்ஸ், சிப்காட், புதுக்கோட்டை.
181.	*253*	**எஸ். பரமசிவம்**, *1/882* பாலன்நகர், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.
182.	*135*	**SK. பரமசிவம் செட்டியார்**, வாழைமரத்து ஜவுளிக்கடை, புதுக்கோட்டை.

183. 136 R. பரமேஸ்வரன், ராதாகாபே, புதுக்கோட்டை.

184. 44 பழனியப்பன், வித்யா மெடிக்கல்ஸ், புதுக்கோட்டை.

185. 80 S. பழனியப்பன், M.A., M.Phil., புதுக்கோட்டை.

186. 83 மு.ந. பழனியப்பன், ராசாப்பட்டி, 622 004.

186A 269 N. பழனியப்பன், B.Sc., B.Ed., கோட்ப் பொறியாளர் தொலைத் தொடர்புத்துறை, பொன்னமராவதி.

187. 132 பழனியப்பன், காமராசபுரம், புதுக்கோட்டை.

188. 56 இராம. பழனியப்பன், நிஜாம் காலனி, புதுக்கோட்டை.

189. 50 N. பழனிவேலு, KP பர்மாசூடிகல்ஸ், புதுக்கோட்டை.

190. 186 C. பன்னீர்செல்வம், பெரியவாடி.

191. 104 பாலகிருஷ்ணன், சென்னை.

192. 159 Er. K. பாண்டியன், மின்வாரியம், புதுக்கோட்டை.

193. 243 Er. E. பாபு, மின்வாரியம், புதுக்கோட்டை.

194. 131 Dr. இரா. பாலசந்திரன், மணோன்மனியம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

195. 176 Dr. V.R. பாலகிருஷ்ணன், M.B.B.S., இலண்டன்.

196. 207 புலவர். மு. பாலசுப்பிரமணியன், M.A., B.Ed., 23, 2வது தெரு PVC நகர், புதுக்கோட்டை.

197. 134 சித. பாஸ்கரன், வடகாடு.

198. 242 Er. D. பிருதிவிராஜ், மின்வாரியம், புதுக்கோட்டை.

199. 234 G. புருஷோத்தம், விநாயகா வளையல் சென்டர், புதுக்கோட்டை.

200. 214 புவனா ஜுவல்லரி, புதுக்கோட்டை.

201. 181 T. புஷ்பராஜ், Ex.MLA தில்லைநாயகி பஸ் சர்வீஸ், புதுக்கோட்டை.

202. 137 K. பெரியகருப்பன், சாத்தப்பாநகர், புதுக்கோட்டை.

203. 166 எஸ். பெருமாள் ரெட்டியார், புதுக்கோட்டை.

204. 194 Dr. மதுராமூர்த்தி, M.B.B.S., நிஜாம்காலனி, புதுக்கோட்டை.

205 46 புலவர், இரா. மணிவாசகம், M.A., B.Ed., அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீரனூர்.

206. 202 பேராசிரியர் த. மணி M.A., பாரதி நகர், புதுக்கோட்டை.

207. 7 புலவர். தி.சு. மலையப்பன், M.A., B.Ed., செயலர் கம்பன்கழகம், புதுக்கோட்டை.

208. 115 Rtn. K. மனோகர், பேக்கர்ஸ் ஆப். இந்தியா, புதுக்கோட்டை.

209. 176 K. மனோகரன், நவீனாலேத், வல்லத்திராக்கோட்டை.

210. 88 MR. மாணிக்கம், ஒப்பந்தகாரர் சார்லஸ் நகர், புதுக்கோட்டை.

211. 53 த. மாரிமுத்து, Ex. MLA நிஜாம்காலனி, புதுக்கோட்டை.

212. 81 J. முகமது கனி, நகர்மன்றத் தலைவர், புதுக்கோட்டை.

213. 263 MK. முகமது அலி, ராசிமில், ஆலங்குடி.

214. 171 K. முத்தையா, பாங்க் ஆப் மதுரை, ஆலங்குடி.

215. 215 சி. முத்தையா, ஆசிரியர் (ஒய்வு), மாங்கோட்டை.

216. 206 புலவர் முத்து, ஆசிரியர் (ஒய்வு) ஆலங்குடி.

217. 168 மு. முத்துகுமார், PCC வங்கி, புதுக்கோட்டை.

218 2 Dr. முத்துக்குமரன் M.A., P.hd., முன்னாள் துணைவேந்தர், திருச்சி.

219. 39 நா. முத்துகிருஷ்ணநாயுடு, தலைவர் சன்மார்க்க சங்கம், புதுக்கோட்டை.

220	42	முத்துப் பாண்டியன், DCTO காமராசபுரம், புதுக்கோட்டை.
221.	247	முத்துச் செல்லப்பன், 5602/2 தெற்கு 4ம் வீதி, புதுக்கோட்டை
222.	189	சி. முத்துச்சாமி, வனச்சரக அலுவலர், வாண்டாகோட்டை.
223.	208	புலவர் முருகையன், 59A/3, சாமு முதல் தெரு, பட்டுக்கோட்டை.
224.	255	Dr. RK. மூர்த்தி M.B.B.S., ராமனுக்கிரகம், வடக்குராச வீதி, புதுக்கோட்டை.
225.	155	A. மெய்யப்ப செட்டியார், செயலாளர் குலபதி பாலையா பள்ளி, புதுக்கோட்டை.
226.	259	S. மெய்யப்பன் B.A., B.L., கீழ 3ம் வீதி, புதுக்கோட்டை.
227.	221	RM. மெய்யப்பன், இந்தியன் வங்கி, புதுக்கோட்டை.
228.	226	Dr. வரப்பிரசாத்ராவ் I.A.S. சென்னை.
229.	164	KTS. வள்ளியப்ப செட்டியார், மீனாட்சிபுரம் சாலை, அரிமளம்.
230.	213	H. வஸந்தகுமார், வசந்த் & கோ, சென்னை.
231.	201	SR. வடிவேலு சேர்வை, அரயபட்டி.
232	217	நீ.நா. விஜயகுமார், LIC புதுக்கோட்டை.
233.	258	புலவர் சு. விஜயலட்சுமி, M.A., B.Ed., குலபதி பாலையா பள்ளி, புதுக்கோட்டை.
234.	233	R. வீரபாண்டியன், SM திலக் பை தயாரிப்பளர், புதுக்கோட்டை.
235.	72	S. வெள்ளைச்சாமி, DCTO (ஓய்வு) 6 ஸ்டார் காலனி, புதுக்கோட்டை.
236.	9	K. வேங்கடாச்சாரி B.A., CAIIB சென்னை.
237.	10	திருமதி செண்பகவல்லி வேங்கடாச்சாரி, சென்னை.
238.	200	திரு. M. வேலுச்சாமி தொண்டைமான், ஆலங்குடி.
239.	19	வைத்தியராமன், கானரா வங்கி
240.	35	வைரவன் செட்டியார், ஷண்முகநாதன் ஸ்டோர், புதுக்கோட்டை.
241.	198	வைரமாணிக்கம், ஒப்பந்தகாரர் மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.
242.	87	ய. லலிதாம்பாள், M.A., சென்னை.
243.	55	PR. லட்சுமணன், கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை.
244.	111	M. லட்சுமணன் நாராயணன், ஷேர் புரோக்கர், புதுக்கோட்டை.
245.	125	SM. லட்சுமணன், விநாயகா ஏசன்சீஸ், ANS பில்டிங் புதுக்கோட்டை.
246.	130	லியாகத்தலி, இம்பாலா ஹோட்டல், புதுக்கோட்டை.
247.	259	லியாகத்தலி M.A., குத்தூஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, புதுக்கோட்டை.
248.	139	V. ரவீந்திரன், வல்லத்திராகோட்டை.
249.	261	V. ரவிச்சந்திரன், பாரதி கன்ஸ்டிரக்ஷன், புதுகை.
250.	170	RM. ரெங்கசாமி, லட்சுமிபுரம் 1ம் வீதி, புதுகை.
251.	178	ராசரெத்தினம், சென்னை.
252.	197	ராசசேகரன்
253.	222	K. ராமமூர்த்தி, வருவாய்த்துறை.
254.	224	LM. ஜானகிராமன், வருவாய்த்துறை.
255.	13	SR. ஜானகிராமன், இணைச்செயலர், கம்பன்கழகம், புதுக்கோட்டை.
256.	63	ஜான்பிரிட்டோ, ஆசிரியர், பாரதிநகர், புதுக்கோட்டை.
257.	119	ஹரிராம்ஜோதி M.A., M.Phil., கோனார் காலனி, புதுக்கோட்டை.
258.	46	சுப. உலகப்பன், ஆடிட்டர், நிஜாம் காலனி, புதுக்கோட்டை.
259	15	ராமையா, பிருந்தா மெடிக்கல், வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை.

1999ஆம் ஆண்டு கம்பன் விழா போட்டியில் வெற்றி பெற்றோர் பட்டியல்

மனனப்போட்டி

மழலையர்

முதல் பரிசு : **A.** ஹீரா - மவுன்ட்சியான் பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : இரா. இராஜ்விக்னேஷ் - NTR பள்ளி மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : சுபைதா தஸ்லீம் - குரூஸ் ஆங்கிலப் பள்ளி, புதுக்கோட்டை.

நான்காம் பரிசு : **AK.** சுதன்ராஜ் - அழகு அழகப்பா பள்ளி, புதுக்கோட்டை.

ஐந்தாம் பரிசு : **M.** எழில்மதி - NTR பள்ளி பொன்நகர், புதுக்கோட்டை.

முதல் வகுப்பு

முதல் பரிசு : **M.** பூரணலிங்கம் - வைரம்மெட்ரிக் பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : **K.** சங்கமி - மௌன்ட்சியான் பள்ளி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : **S.** புவனேஸ்வரி - நிர்மலா மெட்ரிக் பள்ளி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : **V.** வீராக்குமார் - மேரி நினைவு ஆங்கிலப்பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் வகுப்பு

முதல் பரிசு : **R.M.** மணிகண்டன் - வள்ளுவர் நடுநிலைப்பள்ளி, குழிபிறை.

இரண்டாம் பரிசு : க. புவனேஸ்வரி - நகராட்சி தொபள்ளி, திருக்கோகர்ணம்.

மூன்றாம் பரிசு : **M.** சார்மிளா - NTR பள்ளி பொன்நகர்.

மூன்றாம் பரிசு : **L.** உமையாள் - நர்சரி குளுணி ஆங்கிலப்பள்ளி நிஜாம் காலனி.

மூன்றாம் வகுப்பு

முதல் பரிசு : **T.** சக்தி புவனா - லிட்டில் ஏஞ்சல் பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : **S.** நிவேதா - கலைமகள் ஆங்கிலப்பள்ளி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : **R.** இலக்கியா - ஸ்ரீ மீனாட்சி ஆங்கிலப்பள்ளி, புதுக்கோட்டை.

நான்காம் வகுப்பு

முதல் பரிசு : ப. பிரகாஷ் - குத்தூஸ் ஆங்கிலப்பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : **K.S.** பிரியதர்சனி - NTR பள்ளி பொன்நகர், புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : ரெ. பிரபாகரன் - VA மெட்ரிகுலேஷன் பள்ளி, புதுக்கோட்டை.

ஐந்தாம் வகுப்பு

முதல் பரிசு : தே. பாக்யா - காந்தி ஆங்கில பள்ளி பூங்கா நகர்.

இரண்டாம் பரிசு : பா. மெய்யம்மை - நகராட்சி பள்ளி, திருக்கோகர்ணம்.

மூன்றாம் பரிசு : சா. அனுசுயா - கலைமகள் ஆங்கிலப்பள்ளி, சீனிவாச நகர்.

ச. துர்கா - வள்ளுவர் நடுநிலைப் பள்ளி, குழிபிறை.

ஆறாம் வகுப்பு

முதல் பரிசு : பீர்முகம்மது - காந்தி ஆங்கிலப் பள்ளி, பூங்கா நகர், புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : K. ஐஸ்வர்யா - மவுண்ட்சியான் பள்ளி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : வீர. திவ்யா - இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல் நிலைப்பள்ளி, வல்லத்திராக்கோட்டை

ஏழாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு

முதல் பரிசு : S. சந்தியா - PSK மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : நஸ்ரின்பானு - காந்தி ஆங்கிலப்பள்ளி, பூங்கா நகர்.

மூன்றாம் பரிசு : ரம்யாகிருஷ்ணன் - குலபதி பாலையா பள்ளி, புதுக்கோட்டை.

பேச்சுப்போட்டி

9,10ம் வகுப்புகள்

முதல் பரிசு : மணிகண்டபிரபு - அ.ஆ.மே.நிப, ஆலங்குடி.

இரண்டாம் பரிசு : ஆ. ரோகினிதேவி - அம.மே.நிப. விராலிமலை.

மூன்றாம் பரிசு : அ. விசாலாட்சி - தூயஇருதய அன்னை உயர்நிலைப்பள்ளி, புதுகை.

11,12 வகுப்புகள்

முதல் பரிசு : தவப்புதல்வி - இராமசாமி தெய்வானை அ.மேபள்ளி, வல்லத்திராக்கோட்டை.

இரண்டாம் பரிசு : R. அப்துல் ரகுமான் - PSK மேல் நிலைப்பள்ளி, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : ச. நவீனா - இராமசாமி தெய்வானை அம்மாள் மேல் நிலைப்பள்ளி, வல்லத்திராகோட்டை.

கல்லூரி நிலை

முதல் பரிசு : கோ. சாந்தி - மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு : செ. சுதா - கணேசர் செந்தமிழ் கல்லூரி, மேலைச்சிவபுரி.

மூன்றாம் பரிசு : பாலசுப்பிரமணியன் - கணேசர் செந்தமிழ் கல்லூரி, மேலைச்சிவபுரி.

கட்டுரைப் போட்டி

9,10 வகுப்புகள்

முதல் பரிசு : சு. நித்யபிரியா - நிர்மலா ஆங்கிலப்பள்ளி, ராசகோபாலபுரம்.

இரண்டாம் பரிசு : R. பிரமிளா - தூய இருதய அன்னை மகளிர் மேல் நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

மூன்றாம் பரிசு : க.மு. அபூபக்கர் சித்திக் - PSK மேல்நிலைப்பள்ளி, தெற்கு 3ம் புதுக்கோட்டை.

11, 12 வகுப்புகள்

முதல் பரிசு : **R.** ராசலட்சுமிஸ்ரீ - PSK மேல்நிலைப்பள்ளி, தெற்கு 3ம் புதுக்கோட்டை.
இரண்டாம் பரிசு : **K.S.** லதா - மவுண்ட்சியான் மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.
மூன்றாம் பரிசு : பாரதிராஜா - தூய வளனார் மேல் நிலைப்பள்ளி, வேங்கடகுளம்.

கல்லூரி நிலை

முதல் பரிசு : ஸோ. டெய்சிராணி - வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக், கைக்குரிச்சி.
இரண்டாம் பரிசு : சொ. கிருஷ்ணமூர்த்தி - கணேசர் செந்தமிழ் கல்லூரி, மேலச்சிவபுரி.


நன்றி

கம்பன் கழம் *24*ஆம் ஆண்டு கம்பன் விழா தொடர்பாக நடத்திய போட்டிகளில் நடுவராகச் செயல்பட்டு சிறந்தவர்களைத் தேர்வு செய்த திருவாளர்கள் சி. இராமச்சந்திரன், G.V. சுப்பிரமணியன், K.T. ராசகோபால், புலவர் மு. பாலசுப்பிரமணியன், புலவர் சகோ. தமிழ்மாறன், R. இராமையா B.A., பெ. சுந்தரம், வே. ராமதாசு, சி. கோவிந்தராசன், Er. கமலாசனம், புலவர் லூர்துமேரி, S. சீனிவாச ரெட்டியார், புலவர் V.K. கஸ்தூரி நாதன், புலவர் இரா. ராமமூர்த்தி, புலவர். சு. கிருஷ்ணமூர்த்தி, புலவர் அன்பு கணபதி, ஓவியர் இராகவேந்திரன், பேராசிரியர் த. மணி. கறு. இராமசாமி. பார்த்தசாரதி, மாரிமுத்து, C.P. இராமன் ஆகியோருக்கு நன்றி.

போட்டிகள் நடத்த தம் PSK மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்தை தந்துதவிய திரு. P. கருப்பையா மற்றும் திருமதி கமலா கருப்பையா ஆகியோருக்கும் போட்டியில் பங்குபெற்ற மாணவ மாணவிகள் , பெற்றோர் ஆசிரியர், பள்ளி முதல்வர்கள், பள்ளித் தலைவர்கள் ஆகியோருக்கும் இதயபூர்வமான நன்றி.

போட்டிகளை முன்நின்று நடத்திய திருவாளர்கள் ம. கந்தையா, புலவர். தி.சு.மலையப்பன், வீர.காசிவிசுவநாதன், புலவர் பெ. ஆறுமுகம், அண்ணாமலை ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றி.

பங்குபெற்ற கல்வி நிறுவனங்கள் *47* பிள்ளைகள் *439*



கம்பன் கழகப் பொறுப்பாளர்கள்




ம. கந்தையா
தலைவர்



புலவர் தி. சு. மலையப்பன்
செயலர்



சி. இராமச்சந்திரன்
துணைத் தலைவர்



வீர. காசிவிசுவநாதன்
துணைத் தலைவர்



K. வேங்கடாச்சாரி
ஆலோசகர்



G. V. சுப்ரமணியன்
மாவட்ட வருவாய் அலுவலர்
(ஓய்வு)
கணக்காய்வர்



சி. கோவிந்தராசன்
இணைச் செயலர்



Rtn. எஸ். ஆர். ஜானகிராமன்
இணைச் செயலர்



ரா. சம்பத்குமார்
இணைச் செயலர்

ஒரு சிக்கலும் - தீர்வும்

முனைவர். செந்தமிழ்ச் செல்வன். இரா. செல்வக் கணபதி எம்.ஏ., பி.எச்டி.,
மயிலாடுதுறை.

கம்பன் தன் பெருங்காப்பியத்திற்கு உரிய கதைக் கருவைத் தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்து கொள்ளவில்லை, ஏன்? என்ற வினாவிற்குப் பலரும் பலவாறாக விடை காண முயல்வர். என்னைப் பொறுத்தவரைப் பெண்மைக்கு ஏற்றம் தரவேண்டும் என்பதற்காகவே சீதாபிராட்டியை மனத்துட் கொண்டு அவன் இராமகாதையைத் தேர்வு செய்திருக்க வேண்டும்.

ஏனென்றால், தமிழ் இலக்கியவாதிகள் கம்பனுக்கு முன்வரை "ஒருத்திக்கு ஒருவன்" என்பதையே வற்புறுத்தி வந்தனர். ஆடவர் ஒழுக்கத்தை நெறிப்படுத்த விரும்பிய கம்பன்" ஒருவனுக்கு ஒருத்தி" என்ற நிலையை உருவாக்க விரும்பியிருக்க வேண்டும். நடையில் நின்றுயர் நாயகன் இராமன், அவன் கருத்தை ஈர்த்திருக்கிறான். அதனால் தான் " இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற நெஞ்சுறுதி கொண்டிருந்த இராமன் கதை அவன் காப்பியக் கருவாக மலர்ந்தது.

பெண்மை பற்றிய உயர் மதிப்பீடு கொண்டிருந்த கம்பன் காப்பியத்தில் ஒரு இடம் என் நெஞ்சை நெருடியது, சீதாபிராட்டி, தாரை, மண்டோதரி முதலாய பெண் அரசியரை ஒளியூட்டி மகிழும் கம்ப நாடகத்தில் ஒரு இடம் சற்றே முரண்பாடாக என் கருத்தில் பட்டது. ஏன் இந்த முரண்பாடு? இதன் பின்புலம் யாதாக இருக்கும் என்ற என் சிந்தனை ஓட்டத்தை இராமகாதை ஆய்வாளர்கள் முன் பணிவுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பெண்களில் நல்லவர்கள் பலருண்டு. சிலர் தீயவராதலும் கூடும். இராமகாதையில் இவ்விருவகை மகளிரும் வருகின்றனர். தாடகை, சூர்ப்பணகை முதலான தீய மகளிர்களைக் கம்பன் இனங்காட்டிக் கவிதை புனைகிறான்.

நல்லாரும், தீயரும் என இரு திறத்தாரும் பெண்களில் உண்டு என்பதை உடன்பட்டுக் கதை நடத்தும் கம்பன், ஒட்டுமொத்தமாக ஓரிடத்தில் பெண் இனத்தையே இழித்துரைக்கிறான்.

பெண் என்பவள் யார்? தகுதி மிகப்படைத்த நம் முன்னோர் பலர் பெண்களை நாடி மணக்காது தனித்து வாழ்ந்தது எதனால் என்ற வினவப்படாத சில வினாக்களைத் தானே முன்னிறுத்திக் கொண்டு கம்பன் விடை தருவது முரண்பாடு போல் தோன்றுகின்றது. கம்பன் மதிப்பீடு இவைதாம்.

"வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள். அதனை உணர்ந்த காரணத்தால்தான், தகுதி மிகப் படைத்த சான்றோர் இவர்கள் நமக்குப் பற்றுக்கோடாக அமைவார்கள் என்பதை மறுத்து, அவர்களை மனத்தாலும் நினையாது விட்டனர்."

இக்கருத்தமைந்த பாடல் வரிகள் அயோத்தியாகாண்டம், கைகேயி சூழ்வினைப் படலத்தில் கவிக் கூற்றாகவே இடம் பெறுகிறது.

"வஞ்சனை பண்டு மடந்தை வேடம்" என்றே

தஞ்சு என மாதரை உள்ள லார்கள் தக்கோர். *(21)*

பாத்திரங்களின் குணநலன்களை, கதை நடத்திச் செல்லும் போக்கில், பிற பாத்திரங்களில் கூற்றுக்களால் வெளிப்படுத்துவது அரிய கலைப் படைப்பாகும். இந்த அரிய ஆற்றலைத் தமிழின் முதல் காப்பியத்திலேயே வெற்றிகரமாகக் கையாண்டவர் இளங்கோவடிகள்.

"வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள்" என்பது கம்பனின் உள்ளார்ந்த கருத்தானால் சீதை முதலிய கற்பரசியரை அவன் போற்றிப் புகழ்வது முரண்பாடாக அமைந்துவிடுமே."

மனமாற்றமடைந்து, தீமையைச் சார்ந்த கைகேயியைச் சித்திரிக்கும் நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டுக் கம்பன் இவ்வாறு மதிப்பீடு செய்துவிட்டான் என்று கற்பித்துக் கொள்ளலாமா?

உணர்ச்சியில் கவிஞன் இவ்வாறு மொழிந்துவிட்டான் என்றால், அடிமனத்தில் கம்பன் பெண்மை பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடு மோசமானதுதான் என்று ஏற்க வேண்டி வருமே. ஏற்க முடியுமா?

கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக நம்முள் எழுகின்றன. அவற்றுக்கு விடை காணும் முன்பு, கம்பன் உணர்ச்சிவயப் படக் காரணமாக அமைந்த காப்பிய நிகழ்வுகளை நினைவு கூர்தல் வேண்டும்.

மந்தரையின் சொல்லாற்றலால் கைகேயி மனம் மெல்ல மெல்ல மாற்றம் அடைகிறது. தன் கணவனிடம் இருவரங்களையும் கேட்க உடன்படுகிறாள். அக்காலைக் கவிஞன் கைகேயியை இழிந்துரைக்கக் காணோம். மாறாக அவளது மனமாற்றத்தின் பின் விளைவுகளை நினைவு கூர்ந்து மகிழ்கிறான்.

"தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி

தூய சிந்தையும் திரிந்தது"

(மந்தரை சூழ்ச்சிப்படலம் 85)

எனப்படைக்கும் கம்பன், கைகேயியைத் "தேவி" என்றும், அவள் தூயசிந்தையுடையாள் என்றும் இசைந்து போற்றுகின்றான்.

காப்பியப் போக்கு முழுதும் உணர்ந்து கதை நடத்தும் கவிஞன் ஒரு பாத்திரத்தின் செயற்பாட்டால் ஏற்படும் பின் விளைவும் தெரிந்தேயிருக்கும். எனவே, கம்பன் கைகேயி மனமாற்றத்தின் பின் விளைவை நினைத்து, அவள் மனமாற்றத்திற்குப் பாராட்டு மொழிகளையும் வழங்குகின்றான்.

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்துனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ் வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகு கின்றதுவே.

(மந்தரை சூழ்ச்சிப்படலம் 86.)

கைகேயியைத் "தூமொழி மடமான்" என்று பாராட்டிப் பதிவு செய்யும் கம்பன், காப்பிய நோக்கம் அவன் மனமாற்றத்தால்தான் அமைந்தது என்பதை உடன்படுகிறான். மேலாக இராமன் புகழை இவ்வுலகம் பருகி மகிழவும் அவளே காரணம் என்று பெருமிதப்படுகிறான்.

காப்பியப் போக்கில் ஒரு பாத்திரத்தின் மனமாற்றத்தைக் கதை நடத்திக் காட்டி, அப்பாத்திரத்தைப் புகழ்ந்து பேசி அதன் விளைவுகளை அங்கீகரித்த கவிஞன் பல பாடல்களுக்கு அப்பால் மீண்டும் சினந்தெழுந்து, அப்பாத்திரத்தின் மீது கொண்ட கோபத்தால், தன் கூற்றாகவே பெண்கள் வஞ்சனையின் மறுவடிவம் என்று பேசுவது எவ்வகையில் ஏற்கத் தக்கதாகும் என்ற வினா நம்முள் எழுகிறது. நாம் திகைத்து நின்கிறோம்.

மேலும் மேலும் இந்த முரண்பாடு வளர்ந்து கொண்டே போகிறது. கைகேயி வரம் கேட்டபின் மீண்டு தயரதன் இரங்கும் இடத்தில் கம்பன் கைகேயியை.

"தன்னேர் இல்லாத் தீயவள்"

என்று கவிக் கூற்றாக ஏச்சுரைக்கிறான். இயற்கையே சினம் கொண்டதைச் சித்திரிக்கையில்,

"கேகயத்து அரசன் பயந்த விடத்தை, இன்னதோர் கேடு சூழ்
மா கயத்தியை...

எனத் தன் கூற்றாகப் பதிவு செய்து, கைகேயியை கேகயன் பெற்றெடுத்த விடம் என்றும், அவள் ஒரு பெரிய கயமையுடையாள் என்றும் குமுறுகிறான்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆத்திரத்தில் விளைந்த அரும்கொடையாக, கயவன் என்ற ஆண்பாற்சொல்லுக்கு நிகராக முதன்முதல் கயத்தி என்ற பெண்பாற்சொல் கம்பன் வழி நமக்குக் கிடைக்கிறது.

மேலும், கைகேயியை,

"தீ அடங்கிய சிந்தையாள்" *(57)*

என்றும்

"இடை ஆன பாவி" *(59)*

என்றும்

"வெம்பாவம் முற்றிய பேதை" *(65)*

என்றும் கடுஞ்சொற்களால் கம்பன் கனன்று உரைத்துக் கதை நடத்துகிறான்.

கைகேயி சராசரி மானுடப் பெண் அல்லள். மானுடத்தின் மேம்பட்ட தெய்வத்தன்மையள் என்பதை உணர்ந்து உரைத்தவன் கம்பன். மந்தரை மனமாற்றம் உண்டாக்க வேண்டி உறங்கிக் கிடக்கும் கைகேயினைக் கைகளால் தீண்டுகிறாள். கைகேயி கண் விழிக்கிறாள்

இங்கே கம்பன்

"தீண்டலும் உணர்ந்த அத் தெய்வக் கற்பினாள்" (மகூப52)

என்று வடித்துக் கைகேயியைத் தெய்வக் கற்பு உடையவள் என்று உணர்ந்து உணர்த்துகின்றான்.

தீண்டியவள் சொல்லவருவது இன்னது என்பதனை அவள் கூறாமலேயே உணரும்பேராற்றலையே கம்பன் "தெய்வக் கற்பு" என்று கூறியிருக்க வேண்டும் என்பது, "ஐயப்படாது ......" என்று தொடங்கும் திருக்குறளால் தெளிவாகிறது.

கைகேயி தெய்வக்கற்பினள் என்று பதிவு செய்ததை மறவாது போற்றி நின்று பல ஆயிரம் பாடல்களுக்கு அப்பால், இராமன் கூற்றாக.

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும்" என்று அவளைத் தெய்வமாக உயர்த்தியும் காட்டுகின்றான்.

இவ்வாறாகக் கைகேயியைத் " தெய்வக் கற்பினள்" என்றும், "தூமொழிமடமான்" என்றும், அவள் செயலால்தான் இராமன் புகழ் உலகமெலாம் பரவியிருக்கிறது என்றும் ஏற்றுப் போற்றும் கம்பன், பின் ஏன்? எதற்காகப் பெண் இனத்தையே "வஞ்சனையின் மறுவடிவம்" என்று இழித்துரைக்க வேண்டும்?

இதற்கு விடைகாண தமிழ் இலக்கியங்களின் மேல் ஒரு கண்ணோட்டம் செலுத்தியாக வேண்டும்.

கவிஞன் தாம் வாழும் சமூகம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதனுடன் தன்னை முற்றிலுமாக இணைத்துக்கொள்ளாது, அதிலிருந்து மேலெழுந்து சிந்திக்கும் ஆற்றலுடையவனாகவே இருப்பான். அதுவே, அவனை நம் வணக்கத்துக்குரியவன் ஆக்குகிறது. இவ்அளவுகோல் தமிழ் இலக்கியம் படைத்த கவிஞர்கள் பலருக்கும் பொருந்தும்.

என்றாலும், கவிஞன் காணவிரும்பும் சமுதாயம் ஒன்றாகவும், அவன் வாழும் சமுதாயம் ஒன்றாகவும் வேறுபட்டே நிற்கும். நின்று வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் பல உண்டு.

கண்ணகியை மாபெரும் பத்தினியாக இளங்கோ சித்தரிக்கிறான். ஆனால், அவள் வாழ்வைப் பறிகொடுத்த ஓர் அபலையாகவே சமூக நோக்கில் காணப்படுகிறாள்

மணிமேகலை "பசிப்பிணி தீர்த்த அறச் செல்வி" என்கிறது காப்பியம். மாதவி மகளாகப் பிறந்ததால் சமூகத்தால் சமூகத்தில் ஒரு ஆடவனுக்கு மனைவியாக வாழ முடியாது துறவு மேற்கொண்ட "பெண்மையின் அவலம்" சமூகத்தில் நிழலாடுகிறது.

பெண்மைக்குப் பேரிடம் தர முயலும் பாரதி கூட ஒரு நேரத்தில் சமூகத்தின் போக்கிலிருந்து விடுபட இயலாது ''பெட்டைப் புலம்பல்'' என்று பெண்களை நெகிழ்ந்துரைக்கிறான்.

கம்பனின் நிகழ்காலச் சமூகத்தில் பெண்ணுக்குப் பெரிய மரியாதை ஏதும் இருந்திருக்க வாய்ப்பில்லை. கவிஞன் விருப்பம் பெண்மையை உயர்த்திச் சிறப்பிக்க வேண்டும் என்று இருந்தாலும் அவன் வாழும் சமூகத் தாக்கத்தால், ஆங்காங்கே பெண்மை பற்றிய சமூகம் சார்ந்த மதிப்பீடு அவனையும் அறியாது வெளிப்பட்டுவிடலாம். கம்பன் சினம் இவ்வாறு கொப்பளித்து வந்திருக்கலாம் என்று கருதுவது ஒன்று.

இரண்டாவதாக வேறு ஒரு வகையில் சிந்திக்கலாம். கவிஞனுக்குக் காப்பியம் நடத்துவதில் பல சிக்கல்கள் உண்டு. தன் விருப்பம் யாதாயினும் சமூக விருப்பங்களுக்கும் மரபுகளுக்கும் அவன் அடிபணிந்தே ஆகவேண்டும். தீயவன் என்று நன்கு உணர்ந்த ஒருவன் இறந்துவிடுகிறான். இடுகாட்டில் அவனுக்கு இரங்கல் கூட்டம். நாம் என்ன செய்ய இயலும்? அவன் தீமைகளை உள்ளடக்கிக் கொண்டே, பலரோடும் இணைந்து நாமும் நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி நிற்கிறோம். இச்செயல் நம்மை மீறிய சமூகத் தாக்கத்தால் அமைவது. இதேபோல், உணர்ந்தே, நன்மையையும் சில நேரங்களில் சமூகத்தோடு இணைந்து தீமை என்று நாம் வழி மொழிய வேண்டி வரும்.

கைகேயி தெய்வத் தன்மையள். அவள் மனமாற்றமே இராமன் புகழுக்குக் காரணம் என்று தெளிய உணர்ந்த கவிஞன், அவள்மீது அளப்பரிய மரியாதையால் முன்னே புகழ் மொழிகளை அடுக்கியிருக்க வேண்டும். ஆனால் சமூகம் பின் விளைவுகளைப் பற்றி எல்லாம் ஆலோசிக்கும் திறன் படைத்தது அன்று. ஒரு பெண் - ஒருவன் மனைவி - அவள் கணவன் மரணத்திற்கே காரணமாகிறாள் என்று அறியும் ஒரு சமூகம், அவள் எவ்வளவு பெரியவளானாலும் அவளை ஏற்காது இழி சொற்களால் தூற்றவே செய்யும்.

அவ்வாறு கைகேயியைத் தூற்றும் ஆத்திரம் கொண்ட ஒரு சமுதாயத்தில், நாம் அன்னியப்பட்டு நின்றால், சமூகம் நம்மையே ஐயுறும் என்ற நியாயமான அச்சத்தால் கம்பன், பத்தோடு பதினொன்றாக நின்று கைகேயியை ஏசியிருக்கவும் கூடும்.

இவற்றில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொண்டால் கவிஞனுக்குப் பெருமை. கம்பனுக்கு வெற்றி. ஏற்கவில்லை என்றால் கம்பன் முன்னுக்குப் பின் முரண்பட்டிருக்கிறான் என்ற குற்றம் வந்து சேரும்.

நான் வாதப்பிரதிவாதங்களை எடுத்து முன்வைத்துள்ளேன்.

நீதிபதி நீங்கள். தீர்ப்பு உங்கள் கையில்.

"வலிமையும் எளிமையும்"

"முத்தமிழ்வித்தகர், "அருட்கதை நம்பி"

புலவர். கோ. சாரங்கபாணி, எம்.ஏ,. காரைக்கால்.

இராம காதையில் இடை இடை வருகிற கதைகள், உலகுக்கு நல்ல கருத்துக்கள் பலவற்றை வழங்கும் களஞ்சியங்களாக விளங்குகின்றன. கூர்ந்து நோக்குவோமானால், அக்கதைகள் காவிய ஓட்டத்துக்குத் துணை செய்வன என்பதைக் காட்டிலும், கற்பவரின் கருத்துக்குக் களியூட்டுவனவாக அமைந்துள்ளமை விளங்கும்.

இரணியன் வதைப்படலம் என்னும் ஒரு படலத்தையே அமைத்துப் பிரகலாதனின் பத்திமையை விளக்கும் அழகு, வேறெங்கும் இராம காதையில் காண இயலாது ஒன்று.

வீடணன், அற்ப மானிடர் இராம இலக்குவர் எனக்கொண்டு நீ நடத்தல் முறையன்று, அண்ணா, உன்னைக் காட்டிலும் பன்னூறு மடங்கு வரபலங்களும், புயபலமும் உடையவன் இரணியன், அவன் தன்னுடைய மகனிடம் மாறுபட்டு மாலவனொடு முரணி, இறுதியில் அழிந்தான். நீயும் அதுபோல் அழிவு அடையாதே என்று இராவணனிடம் கூறுகிறான்.

அந்த இடத்தில் தான் இரணியன் கதை காவியத்தில் இடம் பெறுகிறது.

இராவணன் தன் வலிமையைப் பெரிதாகக் கருதி இராமனொடு மாறுபட முற்படுவது ஸ்ரீமந் நாராயணனை எதிர்த்து இரணியன் அழிவுற்றதற்கு இணையாகும் என்று வீடணன் கூற முனைந்தது எனினும் அச் சரித்தத்தால் புலப்படும் கருத்துக்கள் என்றும் போற்றப்பெறுபவை.

நன் மாணாக்கன் :

ஆசிரியர் கூறுவதை அமைவுறக் கொண்டு அறிவு வளர்ப்பது மாணவனுக்கு உரிய இலக்கணம். ஆசிரியன் கூறுவது தவறு, காட்டுவது தீ வழி என்று உணர்ந்தால் அவன் சொல்லை ஏற்காது தன் வழிநாட்டுவது நன்மாணவன் இலக்கணம் என்பதைப் பிரகலாதன் சரித்திரம் உணர்த்துகிறது.

கல்வி கற்கத் தொடங்குகையில், பரம்பொருளின் திருப்பெயர் கூறி வாழ்த்தி வணங்கிப் பின்னரே தொடங்குதல் முறை.

அதனைச் சொல்லுவதற்குரிய நேரம். பிரகலாதனின் ஆசிரியன், "இரணியாய நம" என்று சொல்லி வித்தை பயில முற்படுக என்று பிரகலாதனிடம் கூறினான். "இரணியாய நம" என்பதே பரம்பொருளின் திருநாமம், இரணியனே பரம்பொருள் என்பது அவன் பயிற்றுவிக்கத் தலைப்பட்டது. ஆனால், பிரகலாதனோ, இது நல் தவம் அன்றென மொழிந்தான்

"ஓதப்புக்கு அவன் உந்தைபேர் உரை எனலோடும்
போதத்தன் செவித்தொளை இருகைகளால் பொத்தி
மூதக்கோய் இதுநல்தவம் அன்று என மொழியா
வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்தான்

(இரணியன் வதைப்படலம், 151)

"நமோ நாராயணா" என்று பிரகலாதன் கூறிய மறுகணமே, ஆசிரியன் என்ன காரியம் செய்தாய் என்று நடுங்கலானான்.

பிரகலாதன் நல்ல குணங்களின் உறைவிடம்,
அவன், "அறிஞரின் அறிஞன்.
தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான்
நாயகன் தனிஞானி நல்லறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் உளன் தக்கோன்

(இரணியன் வதைப்படலம், 148)

ஆசிரியன் உரைத்ததை வேதம் எனக் கொண்டு போற்றவேண்டும் என்னும் உயர் உள்ளம் உடையவனே அவன். எனினும் ஆசிரியன், வேதத்துக்கு முரணாகக் கூறியதும் அதனை ஏற்க மறுத்து நன்னெறியே விரும்பிமொழிந்தான் ஆசிரியனோ,

கெடுத்து ஒழிந்தனை என்னையும் உன்னையும் கெடுவாய்
படுத்து ஒழிந்தனை பாவி எத்தேவன் பகர்தற்கு
அடுத்தது அன்றியே அமல்ஒன்று பகர நின் அறிவில்
எடுத்தது என் இதுஎன் செய்தவண்ணம் நீ என்றான்

(இரணியன் வதைப்படலம், 153)

பிரகலாதன், நீ கூறும் புதிய வேதம் அன்று, முன்னை வேதத்தின் முதற்பெயரே கூறினேன். இதன் மூலம் என்னை மட்டும் அன்று, உன்னையும் கடைத்தேற்றினேன். என்ன தவறு என்று கூறி முடிக்கும்போது

"என்னை குற்றம் நான் இயம்பியது இயம்புதி என்றான்

என்ன குற்றம்? சொல் என்பது ஒருபொருள், நீ கூறியதை

நான் கூறுதற்கில்லை, நான் சொன்னேனே வேத முதல்வனின் பெயர் அதனைச் சொல் என்றும் ஒருபொருள்படும் படிக் கூறினான்.

ஓதாது உணர்ந்த ஒப்பரும் அறிஞனாம் பிரகலாதன், நாராயணன் பெயர் அன்றிப் பிறிது அறியேன், இனி உன்னிடம் ஒதுதற்கும் எனக்கு ஏதும் இல்லை, "ஓதவேண்டவது இல்லை என் உணர்வினுக்கு ஒன்றும், போதியாததும் இல்லை" என்று கூறினான். அகன்றான். ஆசிரியன், இரணியனிடம் இன்னவார்த்தை அவன் கூறினான் என்று சொல்லவும் அஞ்சினான். தனக்குத் தெளிவுற அறிந்த ஒன்றை எவர் கூறினும் மாற்றிக் கொள்ளாத மனத்தெளிவு பிரகலாதன் இந்த மன்பதைக்கு வழங்கியுள்ள கொடையாகும்.

சிறந்தபக்தன் :

எத்தகைய இடர்பாடு நேர்ந்தாலும் கொண்ட அன்பில், கொள்கையில் பிறழாதவனே நல் அடியான் ஆவான்.

சமணர்கள், திருநாவுக்கரசர்க்கு நஞ்சு ஊட்டினர், மதயானை கொண்டு மிதிக்கச் செய்ய முயன்றனர். கல்லில் கட்டிக்கடலில் எறிந்தனர். நற்றுணையாவது நமச்சிவாயமே என்று அத்தனைச் சோதனைகளையும் வென்று மேம்பட்டார். அதுபோன்று பிரகலாதனை எத்துணையோ கொடுமைகளை இழைத்து நாராயணனின் திருப்பெயரைக் கூற வொட்டாமல் தடுத்திட இரணியன் பெரிதும் முயன்றான். மகன் என்று கூட எண்ணிப் பார்க்கவில்லை.

அவ்வளவுக்கு அவன் ஆணவம் மேலோங்கி நின்றது. ஆனால் பிரகலாதனோ சிறிதும் அஞ்சாமல் அத்தனைத் துன்பங்களையும் புன்னகையோடு எதிர் கொண்டு வெல்கிறான். திருமால் மீது கொண்ட அளவற்ற பக்தியால், இரணியன் கொடுஞ்செயல்களில் எந்த ஒன்றும் பிரகலாதனை அணுகக் கூட முடியவில்லை. நான் சொன்னபடி, அவன் தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் தோன்றவில்லையென்றால் என்உயிரை நானே மாய்த்துக் கொள்வேன் என்றான்.

"என்உயிர் நின்னால் கோறற்குஎளியது ஒன்று அன்று யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட இடம் தொறும் தோன்றான் ஆயின்
என்உயிர் நானே மாய்ப்பன் பின்னம் வாழ்வு உகப்பலென்னின்
அன்னவற்கு அடியேன் அல்லேன் என்றனன் அறிவின்மிக்கான்"

(இரணியன் வதைப்படலம், 255)

பிரகலாதனின் உறுதி, தன் அடியவன் சொல் பொய்த்து விடக்கூடாதே என்பதில் திருமாலுக்கு இருந்த கனிவு, நரமடங்கலாய்ப் பெருமானைத் தோன்றுவித்தன.

"அப்போதும் பிரகலாதன் தன்தந்தை இரணியனைக் காக்க முயல்கிறான்.

போர் செயற்கு நின்ற இரணியனை நோக்கி, உன் மனத்தில் இவனே பரம்பொருள் என்கிற உணர்வு இன்னும் தோன்றவில்லையா? உடன் பிரானை வணங்கு, உன் பிராணன் நிலைக்கும் என்றான்' அழிவு வரும்வேளையில் அறிவு செயல்படாதல்லவா? கேட்கவில்லை இரணியன், 'அவனை மீட்க இல்லை எவரும். அதன் பின் பக்தன் பிரகலாதன் நரமடங்கல் மீது அன்புகொண்டு நின்றானே யன்றித்தன் தந்தைக்கு நேர்ந்த நிலைக்குச் சிறிதும் இரங்கவில்லை.

தன் தந்தையைக் கொன்றான் என்கிற எண்ணம் சிறிதும் இல்லாத அன்பு பிழம்பாய்த் திகழும் பிரகலாதனை நரமடங்கல் வியந்த அன்பொடுநோக்கியதை.

உன் தந்தையை உன்எதிரில் கொல்லவும் சிந்தை நடுங்காது அன்புடன் பத்திமை கொண்டு சிறந்த பிரகலாதனே! உனக்கு என்ன கைம்மாறு செய்வேன் நான் என்கிறான் பெருமான்.

வேறு எவருக்கும் கிடைக்க முடியாத பெருமை, இறைவனே தன் அடியவனுக்கு என்ன கைம்மாறு செய்வேன் என்று கழிவிரக்கம் கொள்ளுகிற சூழல் பிரகலாதனுக்கு மட்டுமே கிடைத்தது.

"உந்தையை உன்முன் கொன்று உடலைப் பிளந்து அளையச் சிந்தைதளராது அறம் பிழையாச் செய்கையாய் அந்தம் இலா அன்பு என்மேல் வைத்தாய் அளியத் தாய் எந்தை இனி இதற்குக் கைம்மாறு யாது என்றான்"

"அயிரா இமைப்பினை ஒராயிரம் கூறு இட்ட
செயிரின் ஒருபொழுதில் நுந்தையை யாம்சீறி
உயிர்நேடுவேம் போல் உடல் அளையக் கண்டம்
செயிர்சேரா உள்ளத்தாய்க்கு என்இனியாம் செய்கேம்"

(இரணியன் வதைப்படலம் 295, 296)

தன்னுடைய அடியவனாம் பிரகலாதன் சிறிது மனம் வருந்தி நெகிழ்ந்தாலும் அவனுக்கு எதிரில் இரணியனை வதைப்பது நரசிம்ம மூர்த்திக்கு இயலாத ஒன்று ஆகியிருக்கும், அப்படிக்கின்றித் தன் அவதார நோக்கம் நிறைவு எய்த உதவியவன் பிரகலாதன் என்று கொண்டு போற்றுகிறான் பெருமான்.

வரம் பெறும் தரம் :

உனக்கு வேண்டுவதைக் கேள் என்ற நரசிம்ம மூர்த்திபிடம், நான்புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் சிவனிடம் வேண்டிய அப்பரடிகளைப் போல,

"என்புபெறாத இழிபிறவி எய்தினும் நின்
அன்புபெறும் பேறு அடியேற்கு அருள் என்றான்"

(இரணியன் வதைப்படலம் 298)

இரணியன் வதைப்படலத்தில், ஆணவம் கொண்டவன் அழிந்தான் என்கிற செய்தியைக் காட்டிலும், பக்தன் ஒருவனுக்குப் பரமன் எத்துணை எளிவந்தவனாய்த் தோன்றுகிறான் என்கிற பேருண்மை அமிழ்தம்போல் கற்போர்க்குக் களிப்பு ஊட்டுகிறது அல்லவா?

மனமும் மானமும்

(இலக்கியச்சுடர் புலவர். இரா. இராமமூர்த்தி எம்.ஏ., எம்.எட்., திருச்சிராப்பள்ளி)

மனம் புலனுகர்ச்சிக்கு அடிமையாவதே நம் தாழ்வுக்குக் காரணம். புலனுகர்ச்சி என்பது சூழ்நிலையின் தாக்கம். இயல்பான அறிவு என்பது மரபின் எச்சம். அறிவால் ஐம்புலனை வெல்பவன் சான்றோன்.

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்புக்கோர் வித்து'.

மரபு, சூழ்நிலை இரண்டும் மனித மனவளர்ச்சியின் காரணங்கள். நன்மைகள் மரபினால் வருவன. தீமைகள் சூழ்நிலையால் உருவாவன. இதனை உணர்ந்த திருவள்ளுவர் 'நட்பாராயும் முறை' பற்றி நமக்குக் கூறும் போது, ஒருவனுடைய பாரம்பரியத்தால் வந்த நற்குணங்களையும், அவன் சூழ்நிலையால் பெற்ற குற்றங்களையும் சீர்தூக்கி மிகுதிக்கேற்ப தகுதியை உணர்ந்து நட்புக் கொள்க' என்கிறார்.

'குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு' என்பது

அவரவர்க்கு சூழ்நிலையால் வருவனவற்றை, பெரியாரைப் பிழையாமை, சிற்றினஞ்சேராமை, ஆகிய அதிகாரங்களாலும், மரபினால் வருவனவற்றை 'ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையும் பாதுகாக்கம்' என்ற தொடராலும் வள்ளுவர் காட்டுகிறார். இப்படிப் பாதுகாப்புடன் வாழும் நம் மனம் காவலை மீறும் போது 'மானம்' கெடநேரிடுகின்றது.

உணவு உண்ணுதலும், நீர்பருகுதலும் உயிர்களின் மரபுவழிப் பழக்கம், இவற்றுள் புலாலை நீக்குதலும், கள்ளுண்ணாமையும் சான்றோர் காட்டும் கட்டுப்பாடுகள். நாவினை அடக்குவது போலவே கண்ணையும், உடலையும் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகவே, பெரியோர்கள் 'காமம் கொடிது' என்றனர். காமம் நாம் பிறக்கும் போதே தோன்றி, சாகும் போதுதான் நீங்கும். அதனால்தான் இது 'காமப்பசி, சரீர தாகம்' என்று வழங்கப்பெறுகிறது. உடலைக் கெடுக்கும் கள்ளும், புலாலும் போல, உடலையும், அறிவையும் அழிக்கும் காமமும் தவிர்க்கத்தக்கது என்றனர்.

காமம் தன் கட்டுப்பாட்டைத் தகர்க்கும் போது பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் சேர்க்கை, பிறனில் விழைதல் என்ற பெருங்குற்றங்களைச் செய்கிறது. இவற்றுள் பெண்வழிச் சேறலும், வரைவின் மகளிரை நாடலும் தனிமனிதனுக்கு மட்டுமன்றிச் சமுதாயத்திற்கும் தீங்குதருதலால், இவற்றைப் 'பொருட்பாலில்' வள்ளுவர் சேர்த்தார். ஆனால் பிறனில் விழைதல்' என்பது தனிமனிதனின் அகப்புற ஒழுக்கங்களைச் சீரழித்து, அடிப்படைப் பண்பையே சிதைத்துவிடும் என்பதால் 'அறத்துப்பாலில்' வைக்கப்பெற்றது. இதன் அடிப்படை நோக்கம் சிந்தித்து மகிழத் தக்கதாகும்.

குடிப்பழக்கமும், புலாலுணவும் உலகெங்கும் தேவையான பழக்கங்களாகவும், இயற்கைச் உடன்பாடு கருதியதாகவும், மனிதரிடம் இன்றும் உள்ளன. இவை மனிதனின் இயல்பான செயலகளாகவே கருதப் பெறுகின்றன. ஆனால் இவற்றுடன் ஒன்றாகக் கருதப்பெறும், பிறன் இல் விழைதல் என்ற செயல், மனிதனுக்கு அமைந்த பொதுவான இயல்பா? காலப்போக்கில் உடல்நலம் கருதிப்புலாலையும், கள்ளையும் மனிதன் தவிர்த்துவிடலாம், ஆனால் பிறன் இல் விழைதல் அத்தகைய பழக்கமாகுமா? நம்மிடையே புழக்கத்தில் உள்ள புலாலுணவு, மதுவுண்ணல் போன்ற பழக்கம்போலவே , பிறனுக்குரிய இல்லப் பெண்ணை விழைவதும் கருதப்படலாமா? இது நம்மிடையே உள்ள பொது இயல்பா? நன்கு சிந்தித்தால் இது மனித குலத்தின் பொது இயல்பே என்பது புலனாகும்.

காமத்தால் உருவாகும் முதல் எல்லைமீறல், தனக்குரியது அல்லாத மற்றொன்றை நாடுதல்தான், அது பிறபெண்களையும், பிறன்மனையாளையும் நாடிக்கனன்று, சூழ்நிலையால் கொழுந்துவிட்டெரிந்து, குடியையே கெடுத்துவிடும். இவ்வாறு தவிர்க்கமுடியாத நிலையில் படரும் இந்தத் தீய செயல், காலங்காலமாக மனித குலத்தைச் சீரழித்தமையால் தான், இதனைக் குடி, சூது, புலால் போன்றவற்றுடன் இணைத்து.

இருமணப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் 'தொடர்பு' எனத்தொகுத்தனர். மின்னாமல், இடிக்காமல், வந்த சுவடறியாமல் நம்மை அழிக்கும் பெருந்தீமை, 'பிறனில் விழைதலாகிய காமச்செயலே' என்பதை விளக்க எழுந்ததுதான் 'இராமாயணம்' ஆகும்.

'பிறனில் விழைவோர் கிளையொடும் கெடும்' என்ற சங்க காலத் தொடரும்,' பிறனில் விழையாமை' என்ற திருக்குறள் அதிகாரமும், இராவணனின் அழிவு, வாலியின் வதை ஆகிய இராமாயண நிகழ்ச்சிகளால் விளக்கம் பெறுகின்றன.

ஒரு நல்ல ஆடவனிடமும், பெண்ணிடமும் இயல்பாக உருவாகும் காமம், தமக்கு உரியவரை மட்டுமே நாட வைத்தால், அது காதலாகி, இல்லறமாகிய நல்லறமாகச் சிறக்கும். தமக்கு உரியது அல்லாத இடத்தை நாடும் காமம் வாலி, இராவணன், சூர்ப்பனகை போன்றோருக்கு ஏற்பட்டதைப் போல உருவாக்கிப் பேரழிவையே செய்யும். சீதையைக் கண்டு, மனத்தைப் பறிகொடுத்த பிறகும் இராமன் செய்த சிந்தனை, அவனுடைய நல்லொழுக்க நிலையை நமக்குக் காட்டுகிறது.

ஆகும் நல்வழி! அல்வழி என்மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்
பாகுபோல் மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும்! வேறிதற்கு ஐயுறவு இல்லையே

(பால, மிதிலை)

என்மனம் கவந்தவள் எனக்கு உரியவளாகத்தக்க கன்னியே! (இவள் பிறர்க்கு உரியவள் அல்லள்) என்ற இராமனின் தூய காதல், வான்மீகத்தினின்றும் மாறுபட்டு தமிழகச் சான்றோர் போற்றிய காதலாக கம்பனால் போற்றப்படுகிறது..

பிறனுக்கு உரியவளாகிய உருமையைக் கவர்ந்த வாலியின் செயலும், பிறன்மனையாளாகிய சீதையைச் சிறைவைத்த இராவணன் செயலும் சமுதாயத் தீமையாகிக் கண்டனத்துக்குரியதாகிறது.

'எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்

தேரான் பிறனில் புகல்'

என்ற குறளின் விளக்கமாகவே மேலே காட்டிய இருவர் வாழ்வும் அமைகிறது. எனைத்துணையர் என்பதில் உள்ள 'அர்' விகுதி பெற்ற பெருமை, அவர்தம் இழிசெயலால் 'தேரான்' என்ற 'ஆன்' விகுதிபெற்ற இழிநிலையை அடைவதைக் கம்பர் காட்டுகிறார். 'பிறனில் விழைதல்' என்ற தீமை நம்பிடம் பொதுவாக இல்லாததுபோலத் தோன்றினாலும் நம்மைமீறி வரைமுறை கடந்த காமமாக அதுவளரும்போது, சமுதாயத் தீமையாகிய போரையும், சரியாகச் சிந்தித்துப் பார்த்தால் உலகையே நடுங்கச் செய்யும் பெரிய நோயையும் உருவாக்கி விடலாம் என்பதையே கம்பர்,

நாரம் கொண்டார், நாடு கவர்ந்தார், நடையல்லா
வாரம் கொண்டார், மற்றொருவர்க்காய் மனைவாழும்
தாரம் கொண்டார், என்றவர் தம்மை, தருமம்தான்
ஈரும் கண்டாய், கண்டகர் உய்ந்தார் எவர் ஐயா?

(ஆரணிய, மாரீசன்.)

என்ற பாடலில் விளக்குகிறார். ஆதலால் மனம் தன்னைக் காத்துக் கொள்ளும்போது, தன்மானம், குலமானம், இனமானம் ஆகிய அனைத்தையும் காக்கும் என்பது புலப்படுகின்றது.

உடல், அறிவை வெல்லும் இந்த ஒழுங்கீனம், உயர்ந்தோரையும் பேதையார் ஆக்கும் என்பதை வள்ளுவர் 'அறன் கடைநின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாருள் பேதையார்இல்' என்ற குறளில் கூறுகிறார். அதனையே கம்பர் 'தின்மையும் பாவமும் சிதைந்து தேயத்தக்க நல்ல திருப்பெயரால்' இராமாயணத்தில் வழங்கி, வழிமொழிகிறார்!

வாழ்க கம்பன் மொழி!

கம்பன் பிரெஞ்சு இலக்கியம் ஒன்றும் இயற்கைக் காட்சிகள்

(பேராசிரியர் ச. மதன் கல்யாணி பிரெஞ்சுக் கல்லூரி, புதுச்சேரி.)

கம்பனோடு ஒன்றும் பிரெஞ்சு இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகள் எவ்வாறு புனையப்பட்டுள்ளன என்பதையும் கம்பனும் மற்ற பிரெஞ்சு எழுத்தாளர்களும் எந்த அளவிற்கு இயற்கையோடு இணைந்து ஒருவரையொருவர் விஞ்சி நிற்கிறார்கள் என்பதையும் நாம் இங்கு காண்போம். இயற்கைக் காட்சிகளைக் கம்பன் தன் கதையின் ஓட்டத்திற்கேற்ப மூவகையாகக் கையாண்டுள்ளான். அவை காட்சிப்பொருள், துணைப்பொருள், உணர்வின் உட்பொருள் என அமையும். நக்கீரர் கூற்றிற்கேற்ப, கைபுனைந்தியற்றாக் கவின்பெருவனப்பை ஓவியமாய் வனைந்திருக்கின்றான், பின் அவன் கதை ஓட்டத்திற்குத் தகுந்தவாறும் கருத்துச் சூழல்களுக்கேற்றவாறும் இயற்கையின் இயல்புகளைப் புனைந்திருக்கின்றான். கதை மாந்தரின் மனநிலைக்கேற்பவும், மனித வாழ்வுக்கு வழிகாட்டியாக அமையுமாறும் இயற்கையின்பால் தன் கற்பனை ஓட்டத்தைச் செலுத்துகின்றான்.

உலகிற்கு உயிரூட்டுவது ஞாயிறு, அதன் ஒளி விளையாட்டுக் காட்சிகளை நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வகையில் கம்பன் வழங்குகிறான். வைகறை, அந்தி வேளையில் வைரக்குவியல்களை வாரி இரைக்கும் சூரியனின் திருவிளையாட்டுகளைக் காண்போம். அயோத்தியா காண்டத்தில் சித்திரக் கூடப்படலத்தில்,

"அம்பொன் மால்வரை அலர்கதிர் உச்சிசென்று அணையப்
பைம்பொன் மாமுடி மிலைச்சியது ஒப்பது"

என்ற காட்சியை ஆர்தர் ரேம்போ என்ற பிரெஞ்சுக் கவிஞனும் கண்டிருக்கிறான்.

கோலோச்சும் அவ்விடத்துக் குன்று சூரியனால்
பற்றி எரிந்திடும் —— கொட்டிக் குவித்த மணியால்

(பள்ளத்தாக்கில் பள்ளிகொண்டேன்)

என்ற அடிகளால் இதை அறியலாம். கம்பன் இராம கதையில் வரைந்த இத்தகை ஓவியங்கள் பரந்து கிடக்கின்றன.

"மீனுடை எயிற்றுக் கங்குற் கனகளை வெகுண்டு வெய்ய
கானுடைக் கதிர்க ளென்னு மாயிரங் கரங்க ளோச்சித்
தானுடை யுதய மென்னும் -
(சூரியோதய வருணனை, பூக்கொய்படலம், பாலகாண்டம்)
திணியார் சினைமாமர மியாவையும் செக்கர் பாயத்
தணியாத நறுந்தளி ரீன்றன போன்று தாழ
அணியா ரொளிவந்து நிரம்பலி னங்க மெங்கும்
மணியா லியன்றம் மலையொத்த-"

(மலையின் தோற்றம் - வரைக்காட்சிப் படலம், பாலகாண்டம்)

மரங்கள் நடுவே ஊடுருவும் பகலவனின் கதிர்கள் மணிகள் போன்றும் பனித்துளிகள் விண்மீன்கள் போன்றும் ஒளிரும் இடங்களை ஒரே அடியில் பாடிய இந்நூற்றாண்டைச் சார்ந்த குலோத் ரோய்

"விரிந்த செந்துகள் ஈரமாய் நனையும்படி"

அழகான கவிதையை வைகறை என்ற தலைப்பில் வழங்கியிருக்கிறார்.

"பொன்வண்ணப் பூங்கொத்து பொட்டிட்ட பூமரத்தில்
கன்னிமகள் வைகறை கரகம் ஆடுகையில்
சாட்டைக்கால் மண்டியிட்ட சாம்பல் சிலந்தியாள்
கால்சிக்கிக் கங்குலாள் கொட்டிவிட்ட விண்மீனால்
நூல்வலை கண்சிமிட்டும்."

ஒப்புமைக் கெடுத்துக் கொண்ட இக்கவிதையின் பொருட்கள் மேற்கூறிய கவிதைகளின் அமைப்பை முழுக்க முழுக்கக் கொண்டிராவிட்டாலும், ஓவியக்காட்சிக்குரிய உறுப்புகள் ஒன்றாகுமாறு பொருந்தியிருக்கிறன.

இயற்கையின் உறுப்புக்களான புள்ளும் விலங்கும் கூட கவிஞர்களின் படைப்புகளில் இடம்பெறுகின்றன.

"பூவலர் குரவோடும் புடைதவழ் புடவீனும்
மாவலர் சொரிசூழற் றுயிலெழு மயிலொன்றின்
தூவியின் மணம்நாற –

என்ற வனம்புகு படலத்தில் கம்பன் கண்ட நடமிடும் மயிலும் அதன் சூழலும், மோரிஸ் கரேம் (இக்காலக் கவிஞன்) கவிதையிலும் அதே நிலையில் இடம்பெறுகின்றன.

"கிளுகிளுக்கும் கிளிப்பச்சைத் தளிராடை சலசலக்க
அலுங்காமல் குலுங்காமல் அரைகுறையாய் விழித்தெழுந்த
பிரிவேராம் சிறுமலர் ஒருசில இமைசிமிட்டி
உலாவந்த வசந்தத்தைக் கிறுகிறுக்க உரசிவிட்டு
நலந்தானா எனவினவி நகைமுகம் பொலிந்தன
அதுகண்டு
வசந்தத்தின் மதுவுண்டு மயங்கிய மயிலொன்று
திசையெலாம் திடீரென்று ஒளிபடர மலர்ந்தது."

"பகலொளி கரப்ப வானை மறைத்தன பறவை யெல்லாம்"

என்று சுந்தரகாண்டத்தின் கடல் தாவு படலத்தில் கம்பன் புனைந்துரைப்பதுபோல் அப்போல்லினேர் கூறுகின்றான்.

"வானத்தின் வெற்றுடலை பறவை இறக்கைகள் மறைத்தன"

ஒளி விளையாட்டுக்களின் அங்கங்களாக இருப்பவை வண்ணங்கள் அவற்றை மலர்களின் வாயிலாகக் கம்பன் வனம்புகு படலத்தில் வாரி இறைத்துள்ளான

செருந்தியின் மலர்தாங்குஞ் செறியித ழினசோகம்
பொருந்தின களிவண்டிற் பொலிவன பொன்னூதும்
இருந்தையி னெழுதீயொத் தொழுவதொ ரியல்காணாய்
பூவலர் குரவோடும் புடைதவழ் பிடவீனும்
மாமலர் சொரிசூழற் றுயிலெழு மயிலொன்றின் ....
கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குலமாலை
பொன்றிணி மணிமானப் பொலிவன பலகாணாய்.
சேந்தொளி விரிசெவ்வாய்ப் பைங்கிளி செறிகோலக்
காந்தளின் மலரேறிப் பொலிவது ...

அசோகின் நெருப்புடனும் செருந்தியின் பொன்னுடனும் மொய்க்கும் கருவண்டுகளைக் காண்கின்றோம் ஒரு பக்கம். இன்னோர் இடத்தில் குராமலரும் பிடவமலரும் சிந்தியசூழல். மேலும் பொன்னிறக் கொன்றைமலர்கள் சொரித்து கிடக்கும் இடங்களில் இந்திரகோபங்கள் பரவித்துயில்வன மணிகள் போன்று பொலிகின்றன. அழகுநிரம்பிய காந்தள் மேல் ஏறியிருக்கும் செவ்வாய்ப் பைங்கிளி இவ்வனத்தில் வண்ணங்களை வாரி இரைத்துள்ளது. மலர்களைப் புள்ளிகளாக இட்டு இதேகோலத்தை விக்தோர் உய்கோ வரைகிறான்.

பசும்புல்லை மகிழச் செய்யும் மலர்களும், பூ செறிந்த செண்டுகளும், இறைநிகர் லீஸ் (மெண்மை நிறம்) பூவுடன் அழகுமிளிர் நெருப்பு, பொன் ஒத்த மலர்கள் இணைய, ஏப்ரல் திங்களில் (வேனிற் பருவத்தில்) கதிரவனின்று தரையில் விழும் செந்துகள் போல் பொலிந்தன.

பொருளைக் காட்டி வண்ணத்தைப் படைத்த இவ்விரு கவிஞர்களின் எண்ணத்தின் கருப்பொருளைக் கொண்டு சற்று வேறுபட்டு ஆர்தர் ரேம்போ மலர்களை மலரச் செய்துள்ளான்.

பட்டுச் சரங்கள், சாம்பல் வண்ண மென் துகிலையும், பச்சைக் கம்பளங்களையும், கதிரவன் முன் கருகும் வெண்கலம் நிகர்த்தபடிப் பரிதிவட்டங்களின் இடையில் வெள்ளிக்கம்பிகளும், கண்களும், கற்றை முடிகளும், மலர்ந்த விரல்களும் விரிவதைப் பொன்னொத்த படிக்கட்டிலிருந்து கண்டேன்.

"வைரக்குவியல்மேல் விதைத்த பொன்நாணயங்களும் மரகதக் கவிகை மாடத்தைத் தாங்கும் முந்திரித்தூண்களும் வெண்பட்டும் மரகதக்கல்மென்மிலாறுகள் இணைந்த பூச்செண்டுகளும் நீரின் செந்தாமரையை வட்டமிட்டு மொய்த்தன.

கம்பன் பூக்களைச் சுட்டிக்காட்டிப் வண்ணத்தை படைக்க ரேம்போ வண்ணத்தைச் சுட்டிக்காட்டி பூக்களை உருவாக்க இவ்விரு கவிஞர்களின் கற்பனைத்திறனை நம்மால் வியக்காமல் இருக்கமுடியாது.

இவ்வாறு இயற்கைக் காட்சிகளை ஓவியங்களாக மட்டும் படைப்பது ஒருபுறம் இருக்க, துணைப்பொருளாகப் பாத்திரங்களோடு இழைந்துவரும் அவற்றின் ஒற்றுமையைச் சற்று நோக்குவோம்.

அயோத்தியா காண்டத்தில் தைலமாட்டுப் படலத்தில், இராமனைத் தொடர்ந்து வந்தோர் உறங்குவதற்குத் தங்குகின்ற சோலையைத் துணைப்பொருளாகப் பயன்படுத்தி ஓவியம் ஒன்றை படைக்கின்றான் கம்பன் :

"குயின்றன குலமணி நதியின் கூலத்தில்
பயின்றுயர் வாலுகப் பரப்பிற் பைம்புலில்
வயின்றொறும் வைகினர்...
.... பின் படிந்தார்"

உறக்கம் கொள்ளப்போலோர் உறையும் இடத்தை வரைந்தது போன்றே மீளாத் துயில் கொண்ட ஒருவன் கிடந்த இடத்தை ரேம்போ வரைகின்றான் :

பசுமை பரவிய பொந்தொன் றதிலே
பசும்புல்லில் வெள்ளிப்பூண் பீறல் பலவற்றை
மாலையிட்டுப் பித்தனெனப் பண்ணிசைக்கும் ஆறு —
பச்சைப் பசேலென்ற
புல்லில் பனிமூட்டம் தன்மேல் பூவிரிக்க
நல்லொளி நீராட்டும் பச்சைவண்ண மஞ்சத்தில்
பள்ளி கொண்டான்...

இராமன் சீதையோடும் இளவலோடும் செல்லும்போது கல்லும் முள்ளுமாக இருந்த பாதையைப் பூமகள் தன் கருணையால் இதமுள்ளதாக மாற்றுகின்றாள்

வறுத்து வித்திய வனையன வல்லயிர் பரற்கள்
பறித்து வீழ்த்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
இறுத்தெ ரிந்தன வல்லிக ளிளந்தளி ரீன்ற –
குழுமி மேகங்கள் குமுறினி குளிர்துளி கொணர்ந்த –
படர்ந்தெ ழுந்த புல்பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன...
தொடர்ந்த பாணரிற் றூங்கிசை முரன்றன தும்பி

(அயோத்தியா காண்டம் - வனம்புகு படலம்)

அதே கருணையைச் சிபேல் என்ற பெயர் கொண்ட பூமகள் அளிப்பதாகக் குறவர் புறப்பாடு என்னும் பாடலில் போதெலேர் கூறுகிறான்.

"மண்ணுள் வளைகுடைந்து வாழ்கின்ற சிள்வண்டும்
அன்னக் காவடியாய் அப்பயணி செல்வதைக்
கண்டுகொண்டு உள்ளிருந்தே கானமழை பெய்தது
அன்னை சிபேல் அவர்மேல் அன்புகொண்டுள்ளதால்
பன்மடங்கு வேய்ந்தாள் பலவகைப் பச்சையை
பாறையில் தண்ணீரைப் பாயவிட்டாள், பாலையை
ஈரமாக்கிப் பூக்கவைத்தாள் இம்மக்கட் காக ..."

- போதெலேர் - நச்சுப் பூக்கள்

இயற்கையை உணர்வின் உட்பொருளாகக் காட்டும் ஓரிரண்டு காட்சிகளை ஈண்டு காண்போம்.

நீல வானமும் நீரும் உறவு கொண்டாடுகின்றன என்று அப்போல்லினேர் ஒரே அடியில் எண்ணற்ற கருத்துக்களையும் காட்சிகளையும் வாரி இரைத்துவிட்டார். அவற்றில் சிலவற்றைக் கம்பன் தெளிவுறக் காட்டும் இரண்டு இடங்களைப் பொழிப்புரையில் காட்டுவோம்.

யுத்தகாண்டத்தில், ஒற்றுக்கேள்விப் படலத்தில் "வானிலர் உறையும் கதிரோன், வானரவீரர் பருத்தமலைகளைக் கடலிலே யிட்டதனாலே பவழம் போற் செந்நிறம் வாய்ந்த பரிசுத்தமான கதிர்களும் கறுத்திடச் செய்த உப்புநீர் தன்னுடலில் படிந்தனால் மங்கிய ஒளியுள்ள நிறம் விளங்குமாறு நன்னீரில் நீராடச் சென்றான்."

பாலகாண்டத்தில், மிதிலைக்காட்சிப்படலத்தில், சீதாவின் காமத்தீ சூரியனை எரிப்பதால் பொறுக்க மாட்டாதவன்போல் முன்னைவெம் கதிரோன் நல்நெடு கரங்களை நடுங்கச் செய்துகொண்டு ஓடிப்போய் கடலில் மூழ்கினான்.

இவ்விரண்டு உறவுகொள் காட்சிகளோடு,

"மீனாறு வேலைப் புனல்வெண்முகில் உண்ணு மாபோல்..."

என்ற அடியும் பொருந்தும்.

வானத்தைச் சார்ந்த ஞாயிற்றின் மறைவையும், முகிலின் இயக்கத்தையும் நன்னீர், கடல்நீர் தம்மோடு பொருந்திக் கற்பனை உணர்வின் வளத்தை வெளிப் படுத்தியிருக்கிறான் கம்பன்.

பிறப்பு இறப்புக்களுக்கு இடமான துறக்கம் முதலிய சிறந்த உலகங்களையும் நாடாது என்றும் மீளாவுலகமாகிய முக்தியைச் சேருமாறு முயல்க என்னும் போதனையை உலகத்தார்க்கு உண்டாக்குபவன் போன்று மறைந்த கதிரோன் பின்னும் தோன்றலானான், உலகத்தார் போன்ற பிறப்பு இறப்பற்ற அவன் இந்தக் கருத்தை விளக்க வந்த கம்பன், அயோத்தியா காண்டத்தில்.

"மறக்குமா றினைய லம்மா வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போல் முன்னைநா ளிறந்தான் பின்னாள்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்"

என்றான் இதையே அப்போல்லினேர்,

வாழ்க்கை நிலையற்றது
"ஆனால் ஞாயிறே உன்னைப் போற்ற விரும்புகின்றேன்
ஏனெனில் நீதிரும்ப வருகிறாய், வந்து
இயற்கையின் மீது கதிர்களைச் சாட்டைகளாய்ச் சொடுக்குகின்றாய்"

என்று தன்புரட்சிக் கவிதையில் கூறுகின்றான்.

கவிதையில் புரட்சி என்றதும், நம் தமிழில் இன்று உலாவந்து பொண்டிருக்கின்ற புதுக்கவிதை நம் நினைவுக்கு வருகின்றது.

பிரெஞ்சுக் கவிஞர்களும் கவிதை அடிகளில், சீர்களில், தொடையில் மரபு என்னும்

[illegible] விலகிக் கட்டுப்பாடற்ற கவிதை அமைப்பில் நாட்டம் கொண்டார்கள். ஆனாலும் கவிதையோடொன்றிவிட்ட எதுகை, மோனை ஆகியவற்றை யொத்த அமைப்புகளை அவர்களால் தூக்கியெறிய முடியவில்லை. மொத்தத்தில் இத்தகைய புரட்சிகள் மக்கள் எண்ணத்தில் தோன்றும் படிப்படியான வளர்ச்சியென்கிறோம். ஆனால் சில வேளையில், மக்கள் மனம் விழையும் புதுப்பாணியாகவும் ஆகும். இத்தகைய புதுப்பாணி எண்ணவோட்டத்தில் பிறந்த குறியீட்டு இலக்கியத்திற்கு (SYMBOLISME) முன்னோடியாய் இருந்தபோதெலேர், பிறிது நுகர் வுணர்வைப் (SYNAESTHESIA) புகுத்தினார் அதாவது பூபாலப் பண்ணைக் கேட்கும் போது சிலருக்கு வைகறைப் பொலிவு கண்முன் தோன்றுவதில்லையா. இதைப் புலன்களுக்குரிய பொறிகள் மயங்கிய நிலை எனலாம். இத்தகைய பிறிது நுகர் உணர்வு கம்பனில் மிளிர்வதைப் பல இடங்களில் காணலாம்.

விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ
குலக்கொடி மாதர்வாய் குமுத நாறுவ
கலக்கடைக் கணிப்பருவங் கதிர்கள் நாறுவ
மலர்க்கடி நாறுவ மகளிர் கூந்தலே.

(பாலகாண்டம் - நகரப்படலம்)

யானையின் மதநீர் யானையின் செயலான ஒன்றைக்காட்டுகிறது. மதம்பிடித்த நேரத்தில் காட்டில் வேங்கை மரத்தில் அது சென்று மோதும். அதனால் வேங்கை மரத்திற்குரிய மலர்களின் நாற்றம் நம்முன் பரவுகிறது. மதநீரின் நாற்றத்தை இங்கு குறிப்பதை விட, வனத்தில் பூத்தக் குலுங்கும் வேங்கை மரங்களே கண்ணில் தோன்றுகின்றன. பெண்களின் வாய் குமுதம் போன்றிருத்தலால், குமுதத்தின் மணத்தை வெளிப்படுத்துவதோடு மட்டுமின்றிச் சிற்றின்பத்தில் திளைப்பதையும் காட்டத் தவறவில்லை கம்பன். அணிகலன்களின் பளபளப்பு ஞாயிற்றின் கதிர்களிடத்திற்குத் தாவி ஒளிக் கோலங்களைப் படைக்கின்றது.

"அதிர்கழல் ஒலிப்பன அயிலி மைப்பன"

(பாலகாண்டம் - நகரப்படலம்)

கழலின் ஒலி ஆண் மக்களின் வீர நடையையும் அவர்களின் கூட்டத்தையும் திரைப்படம் போல் காட்டுகிறது. விளக்கிக் கொண்டு போனால் பெருகும். அதனால், போதெலேரின் கூற்றை ஈண்டு படைக்கின்றேன்.

"மயங்குதல் போல்,
உளங்கொல் மணங்கள், வண்ணங்கள்,
ஒலிகள், ஒன்றிப் பதிலுரைக்கும்"

இதற்கு எடுத்துக்காட்டாக குழவி மேனி போன்ற தண்ணென்ற மணங்களும், ஹோபுவா' எனும் கருவியின் இசையொத்த மென்மணங்களும், புல்வெளிகள் போன்ற பசுமை மணங்களும் உண்டு என்று பாலங்கள் என்ற கவிதையில் விளக்கியிருக்கின்றான்.

ஒரே நினைப்பு

(கலைமாமணி கி.வா. ஜகந்நாதன் எம்.ஏ.,)

தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயிலுக்குச் சென்று பிராகாரத்தை வலம் செய்யும்போதே அது இன்ன கோயில் என்று சொல்லி விடலாம். மூலமூர்த்திக்கு ஏற்ற வகையில் பரிவார தேவதைகளைக் கண்டால், 'இது சிவன்கோயில், இது பெருமாள் கோயில்' என்று வேறுபாடு காண முடியும். மூலமூர்த்திக்கு ஏற்ற வகையில் பரிவார தேவதைகளைத் திருக்கோயிலில் நிறுவியிருப்பார்கள்.

கற்கோயில்களில் இருக்கும் இந்த முறையை ஒரு வகையில் சொற்கோயிலிலும் காணலாம். சொற்கோயிலாகிய காப்பியத்தின் மூலமூர்த்தி, காப்பியத்தின் நாயகன், அந்த நாயகனுக்குத்துணைவராகப் பலர் இருப்பார்கள். அவனுடைய மாற்றானுக்குத் துணைவராக இருப்பவர்களும் பலர் உண்டு. இந்த இருவகைக் கட்சியினரிலும் அவரவர்கள் குணத்துக்கு ஏற்றபடி சுற்றத்தினரும் நட்பினரும் கூடியிருப்பார்கள்.

நாயகன் நினைத்தவாறே நினைப்பதும், நாயகன் பேசியவாறே பேசுவதும், அவன் செய்யுமாறே செய்வதும் அவனைச் சார்ந்தவர்களுக்கு இயல்பு, நாயகனுடைய குணநலங்களின் பேரொளி அவர்கள் வாயிலாகவும் ஒளிரும். இந்தப் போக்கைக் காப்பியக் கவிஞர்கள் தம்முடைய காவியங்களில் ஆங்காங்கே புலப்படுத்தியிருப்பார்கள்.

கம்பன், தான் கட்டிய இராமாயணமென்னும் சொற்கோயிலில் இராமன் என்னும் மூர்த்தியை நாயகனாக நிறுவி அவனுக்கேற்ற பரிவார தேவதைகளையும் அமைத்திருக்கிறான். இராமனுடைய பண்பு அவனுடைய நினைப்பிலும் பேச்சிலும் மலர்வதோடு அவனுடைய சார்புடையவர்களிடத்திலும் அது புலனாகிறது. யாவரும் ஒரே நினைப்பையுடையவர்கள் என்பதைக் காட்டப் பல நுட்பமான நிகழ்ச்சிகளை அவன் அமைத்திருக்கிறான். யாவரும் ஒரே சுருதியில் பேசுகிறார்கள். இதைச் சில உதாரணங்களால் பார்க்கலாம்.

இராமன் அயோத்திமாநகரை விட்டுக் காடு செல்லத் தொடங்கிக் கங்கையைக் கடக்கிறான். அப்பொழுது குகன் எதிர்ப்படுகிறான். இராமனுடன் பிறந்த தம்பியர் மூவர், அவனுடன் பிறவாத தம்பியர் மூவர், பின் மூவரில் முதல்வன் குகன், அவனைச் சந்தித்து அவனுடைய அன்பின் வலிமையைக் கண்டு மனமுருகி "நீ என் தம்பி" என்று இராமன் கூறுகிறான். "நானும் உன்னுடன் வருகிறேன்" என்று கூறிய குகனைப் பார்த்து "நீ என் உயிரனைய தம்பி; இதோ இருக்கும் லட்சுமணன் உன் தம்பி, சீதை உன் அண்ணன் மனைவி; இந்த உலக முழுவதும் ஆளும் உரிமை உனக்கும் உண்டு; அந்தத் தொழிலுரிமையில் பங்கு கொள்பவன் நான் என்று நெருங்கிப் பேசுகிறான்.

அன்னவன் உரைகேளா

அமலனும் உரைநேர்வான்:

"என்உயிர் அனையாய்நீ:

இளவல்உன் இளையான் இந்

நன்னுத லவள்நின்கேள்;

நளிர்கடல் நிலம்எல்லாம்

உன்னுடை யது நான் உன்

தொழிலுரி மையின்உள்ளேன்."

காட்டு வாழக்கையையுடைய பேதையாகிய குகனைக்கண்டு, "நீ என் தம்பி" என்று மனமார ஏற்றுக்கொண்ட செய்தி இராமனுடைய கருணைக்கு அடையாளம். இந்த அரிய பண்பைச் சீதை அசோகவனத்தில் தனியே இருக்கையில் நினைந்து உருகுகிறாள்.

ஆழ நீர்க்கடல் அம்பி கடாவிய

ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ

தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன

வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.

திருமங்கையாழ்வாருடைய உள்ளம் கொள்ளை கொண்ட நலங்களுள் இந்தப் பண்பும் ஒன்று ஆதலால்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது

இரங்கி மற்றவர்க் கின்னருள் சுரந்து,

'மாழை மான்மட நோக்கிஉன் தோழி;

உம்பி எம்பிஎன் றொழிந்திலை உகந்து,

'தோழன் நீஎனக் கிங்கொழி என்ற

சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட

ஆழி வண்ணநின் அடியிணை அடைந்தேன்;

அணிபொ ழில்திரு அரங்கத்தம் மானே"

என்று பாடி ஈடுபடுகிறார்.

"முன்பு நாங்கள் நான்கு பேர் சகோதரர்கள்; இப்போது உன்னோடு ஐந்து பேர் ஆகிவிட்டோம்" என்று விளக்கமாகவே இராமன் அவனைத் தம்பியர் வரிசையில் வைத்தப் பேசுகிறான்.

"முன்புளெம் ஒருநால்வேம்;

முடிவுள தெனஉன்னா

அன்புள; இனிநாம்ஓர்

ஐவர்கள் உளரானோம்,"

இதனைக் குகனும் நினைத்து இன்புறுகிறான்.

"தோழமை என்றவர் சொல்லிய சொல்ஒரு

சொல்அன்றோ?"

என்று மிடுக்குடன் பேசுகிறான் அவன்.

இது நாயகனாகிய இராமன் பண்பு, அவன் குகனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்ட செய்தியை லட்சுமணனும் சீதையுமே அறிவார்கள்.

இராமன் போனபிறகு பரதன் வருகிறான். அவன் இராமனை மீட்டும் அயோத்திக்கு அழைத்து வந்துவிடவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தோடு வருகிறான். இடையிலே கங்கை குறுக்கிடுகிறது. கங்கைக் கரையில் குகன் இருக்கிறான். சுமந்திரன் அவனை அறிந்தவனாகையால் பரதனுக்கு அவன் இயல்பைக் கூறுகிறான். "அவன் கங்கையின் இரு கரைக்கும் சொந்தக்காரன்; கணக்கில்லாத ஓடங்களை வைத்திருக்கிறான்; உங்கள் குலத்தின் தனி நாயகனாகிய இராமனுக்கு உயிர்த்துணைவன்; உயர்ந்த தோளையுடையவன்; ஆண் யானை போன்ற தோற்றத்தைப் பெற்றவன்; வில்லும் கையுமாக நிற்கும் ஏவலாளர்கள் ஒரு கடலைப்போல இருக்கிறார்கள். குகன் என்பது அவன் பெயர்" என்று சொல்லுகிறான்.

"கங்கைஇரு கரையுடையான்;

கணக்கிறந்த நாவாயான்;

உங்கள்குலத் தனிநாதற்

குயிர்த்துணைவன்; உயர்தோளான்

வெங்கரியின் ஏறனையான்;

விற்பிடித்த வேலையினான்;

கொங்கலரும் நறுந்தண்டார்க்

குகன்என்னும் குறியுடையான்"

சுமந்திரன் மதியமைச்சனாதலின் அப்பொழுதைக்குக் குகனால் ஆகும் காரியம் உண்டென்பதை உணர்த்துவதற்காக, எடுத்தவுடன் அவன் பெயரைக் கூடச் சொல்லாமல், "கங்கையின் இரு கரைக்கும் சொந்தக்காரன் கணக்கில்லாத ஓடத்தை உடையவன்" என்று சொல்லுகிறான். அத்தனை பேரும் கங்கையைத் தாண்டவேண்டும் அல்லவா? பரதனோ எப்போது இராமனைக் காண்போம் என்று துடித்துக்கொண்டிருக்கிறான்; அவன் எண்ணமெல்லாம் இராமனிடத்திலே இருக்கிறது. மண்ணிலே காந்தத்தைச் செருகினால் அது இரும்புப் பொடியை மாத்திரம் இழுக்கும். அது போலக் குகனுடைய இயல்புகளைச் சுமந்திரன் சொன்ன போது, அவன் கங்கைக் கரைக்குரியவன், ஓடக்காரன் என்பவற்றைப் பரதன் காது வாங்கிக்கொள்ளவில்லை. "உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவன்" என்று சொன்னதை

மாத்திரம் பற்றிக்கொண்டது. உடனே அப்படியா? இராமனுக்கு உரிய துணைவனா? அப்படியானால் அவன் எனக்குத் தமையனே; நானே போய் அவனைப் பார்ப்பேன் என்று சொல்லி எழுந்து விட்டான்.

தன்முன்னே அவன்தன்மை
தன்துணைவன் முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற
தூரிசிலாத் திருமனத்தான்,
"மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்
என்முன்னே; அவற்காண்பேன்
யானேசென்று" எனஎழுந்தான்.

பரதன் இராமனுடைய தம்பி தூரிசு இல்லாத மனத்தை உடையவன், இராமன், குகனைத் தம்பி என்று சொன்னதைக்கேளாதவன். அவன் குகனிடம் இராமனுக்கு அன்பு உண்டு என்பதை உணர்ந்த அளவில் அவன் உணர்ச்சி விஞ்சி, "அவன் என் தமையன்தான்" என்று சொல்கிறான். மூலநாயகன் பேசிய குரலோடு ஒத்த சுருதியில் இவன் குரலும் அமைகிறது.

பின்பு இருவரும் சந்தித்து அளவலாவுகிறார்கள், பரதன் தன்னுடன் வந்த தாய்மார்களைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான். முதலில் கோசலையைக் காட்டி அவள் பெருமையைக் கூறுகிறான்.

அதைக் கேடட்வுடன் குகன் அப் பெருமாட்டியின் திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து அழுகிறான். அப்போது அவள் பரதனை நோக்கி "இவன் யார்?" என்று கேட்கப் பரதன் சொல்கிறான்; "இவன் இராகவனுக்குத் துணைவன்; லட்சுமணனுக்கும் சத்துருக்கனனுக்கும் எனக்கும் மூத்த தமையன்; குகன் என்பது இவன் பேர்" என்று அறிமுகம் செய்து வைக்கிறான்.

என்றலுமே அடிமின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை, "இவன்யார்?" என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்,
"இன்றுணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய திருநெடுந்தோட் குகன்என்பான்
இந்நின்ற குரிசில்" என்றான்.

சுமந்திரனிடம் "என் முன்னே" என்று சொன்னதை தரித்துச் சொல்பவனைப் போல இங்கே பேசுகிறான். இராமனைப் பெற்ற திருவயிறுடையாளிடமே, "இவன் இராமனுக்குத் தம்பி" என்றும், "மற்றச் சகோதரர்களுக்கு அண்ணன்" என்றும் சொல்லி அக் கருத்துக்கு அரண் செய்கிறான்.

இராமன், குகனைத் தம்பி என்றான், அவன் கூறியதை அவன் தம்பியர் ஏற்றுக்கொண்டால் அல்லவா அச்சொல் பொருளுடையதாகும்? இராமனுடன் இருந்த லட்சுமணன் அதனை ஏற்றுக்கொண்டான் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இங்கே பரதனும் ஏற்றுக்கொண்டான் சத்துருக்கனனுடைய பிரதிநிதியாகவும் இருந்து, "இளையவற்கும் எனக்கும் மூத்தான்" என்று சொல்லிவிட்டான். குகன் பெற்ற உரிமையை இந்த வாசகங்கள் வலியுறுத்துகின்றன. இதோடு நின்றதா?

கோசலை தன் காலில் விழுந்த குகனைப் பார்க்கிறாள். 'இவனையா இராமன் தம்பி என்றான்? இந்த அசடன் பரதனும் அண்ணன் என்கிறானே!" என்று எண்ணும் தாய் அல்ல அவள். இராமன் பிறந்த திருக்கோயில் ஆதலின் அங்கும் ஒரே வகையான குரல் எழுகிறது. குகனையும் தன் மகனாக அவள் ஏற்றுக்கொண்டு, அங்கே நின்ற மூன்று சகோதரர்களையும் ஆசீர்வாதம் செய்கிறாள். "நீங்கள் இனித் துயரங்கொண்டு வருந்தவேண்டாம். அந்த வீரர்கள் இருவரும் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போனதும் நல்ல தாயிற்று. ஆண்யானை போன்ற இந்தக் குகனோடு நீங்கள் ஐந்து பேரும் நீங்காமல் ஒன்றுபட்டு உலகத்தை ஆட்சி செய்யுங்கள்" என்கிறாள்.

"நைவீர லீர்மைந்தீர், இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றாமன்றே விலங்கல் திண்டோள்
கைவீரக் களிறனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்தீர்" என்றாள்.

நாயகனாகிய இராமனுடைய குரலின் எதிரொலியையே கோசலையிடமும் கேட்கிறோம். பெற்ற தாயே ஒப்புக்கொண்ட பிறகு குகன் பெற்ற உரிமை பறிபோக இடம் இல்லையல்லவா? இராமனும் பரதனும் கோசலையும் ஒரே நினைப்பு நினைத்து ஒரே குரலில் பேசுகிறார்கள்.

மற்றோர் எடுத்துக் காட்டு.

அநுமன் இலங்கைக்குச் சென்று சீதையைத் தேடுகிறான். ஒவ்வோரு வீட்டுக்குள்ளும் சென்று சென்று தேடி அலைகிறான். இராவணனது மாளிகையிற் புகுந்து பார்க்கிறான். ஒரு பெரிய கடல் கிடப்பதைப் போலத் துயில்கின்றான் இராவணன், அந்தக் காட்சியைப் பன்னிரண்டு பாட்டுக்களால் விரிவாகக் கம்பன் பாடுகின்றான். பாட்டுப் பன்னிரண்டானாலும் எல்லாம் ஒன்றையே குறிப்பன என்பதற்கு அடையாளமாகப் பதின்மூன்றாவது பாட்டில் தான் வாக்கியம் முடிவு பெறுகிறது. அவ்வளவு பாட்டால் பாடினால்தான் அந்த இராட்சசக் காட்சியை உணர்ந்து கொள்ள முடியும் போலும்!

தன் உருவத்தை அநுமன் குறுக்கிக் கொண்டு, பேருருவம் படைத்த இராவணன் முன் நின்று அவனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் பார்த்தான். அவனுடைய கண்ணிலே பிரளயகாலத் தீ விண்டு எழுந்தது "இந்தத் கணத்தில் இங்கேயே இவனை நசுக்கிவிடுகிறேன்" என்று பல்லைக் கடித்து, இரண்டு கரங்களையும் பிசைந்துகொண்டு எழுந்தான். அதற்குள் சற்றேயோசனை உண்டாயிற்று 'சே! என்ன காரியம் செய்யத்துணிந்தோம்! நமக்கு இராமன் இட்ட கட்டளை என்ன? இவனைக் கொல்லும்படி சொல்லவில்லையே! ஒரு காரியத்துக்காக வந்து மற்றொன்று செய்தல் அறிவுக்கு அழகன்று. அவசரப்பட்டு இதைச் செய்துவிட்டால் பிறகு இது பிழை என்று உணர்ந்து வருந்த நேரும்' என்று எண்ணினான். காலத்தை எதிர்பார்த்துக் கரையை மீறாத கடலைப்போல அவன் அடங்கினான். பிறகு மற்றொன்றை எண்ணினான். இன்று எனக்கு வந்த கோபம் என்னோடு நிற்கட்டும். இந்தப் பைத்தியக்காரக் கோபம் என்னைப் போன்றவர்யாருக்கும் வரவேண்டாம். "சீதாபிராட்டியைச் சிறையில் வைத்த கொடிய இராவணனைக் கொன்று போருக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது ஒரு குரங்கு" என்ற வார்த்தை எழுமானால் பெருவீரனாகிய இராமனுடைய வெற்றி வில்லுக்குக் குறைவாகாதோ? என்று நினைத்த போது அவன் கூசிக் குறுகினான்.

"இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம்
என்னோடு முடிந்திடுக;
கற்றைப்பூங் குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்ததொரு
குரங்கென்றால், முனைவீரன்
கொற்றப்போர்ச் சிலைத்தொழிற்குக்
குறைவுண்டாம்" எனக்குறைந்தான்.

இராமனுடைய ஏவலாளனாக வந்தவன் அநுமன். அவன் தன் நாயகன் புகழைப் பரப்ப வேண்டியவன். அதற்கு மாறாக, "கையாலாகாத இராமன் ஒரு குரங்கை விட்டுப் தூங்கிக்கொண்டிருந்த இராவணனைக் கொன்றுவிட்டான்" என்ற பழிச்சொல் வருமே என்று அவன் அஞ்சினான். இராமனுடைய வில் வீரத்துக்கு இழுக்கு உண்டாகிவிடும் என்ற எண்ணம் அப்போது அவனுக்கு உண்டாயிற்று.

இந்த நினைப்பு வேறு இடங்களிலும் எழுவதைக் கம்பன் அழகாகக் காட்டுகிறான்.

அநுமன் சீதையைக் கண்டு, தான் இராகவன் தூதன் என்று சொல்லி, வந்த காரியத்தைக் கூறினான். அவளுடைய துயரத்தைக் கண்டு, 'இப்பெருமாட்டியை நாம் கொண்டு அகல்வதே கடமை' என்று எண்ணினான்.

"அடியேன் சொல்வதைக் கேட்டுக் கோபம் கொள்ளாதே. உன்னை எடுத்துச் சென்று இராமனிடம் காட்டி அவன் அடியைப் பணிவேன். அதற்கு ஏற்ற காலம் இது என் தோளில் ஏறிக்கொண்டால் எத்தகைய ஊறுபாடும் இல்லாமல் இராமனிடம் சேர்த்துவிடுவேன்" என்று சீதையைப் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டான்.

அதைக் கேட்ட சீதை அதற்கு இணங்கவில்லை. "அப்பா, உன் ஆற்றலுக்கு ஏற்றபடியே நீ பேசுகிறாய். நீ சொன்னபடியே செய்து விடுவாய். அதில் ஐயம் இல்லை. ஆனால் என்னுடைய பெண்புத்திக்கு அது நியாயமன்று என்று தோன்றுகிறது" என்று சொல்லிப் பல காரணங்களை எடுத்துரைத்தாள்.

"நீ எந்த வஞ்சனையான எண்ணமும் உடையவன் அல்ல. என்னை மாற்றான் எடுத்துச்சென்று சிறைவைக்க, அவனைத் தண்டித்து என்னை மீட்டுச் செல்வது இராமனுடைய கடமை, அதனை அவன் செய்யாவிட்டால் அவனுடைய வில்லுக்கு இழுக்கு உண்டாகும்" என்பது ஒரு காரணம்.

"அன்றி யும்பிறி துள்ளதொன் னாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுனும்."

இராமனுடைய வில்லுக்கு மாசு உண்டாகும் என்று முன்பு அநுமன் நினைத்ததையே இங்கே சீதை கூறுகிறாள். பின்னும் அவள், "நான் நினைத்திருந்தால் இந்த இலங்கை மாத்திரமா, உலகங்கள் யாவற்றையும் என சொல்லினால் சுட்டு விடுவேன். அப்படிச் செய்தால், இராமனுடைய வில்லின் ஆற்றலுக்கு மாசு உண்டாகும் என்ற நினைவால், அந்த எண்ணத்தை, தகாத பொருள் கையில் கிடைத்தால் உடனே வீசி எறிவதுபோலப் போக்கி விட்டேன்" என்கிறாள்.

"அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னால்சுடு வேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்."

'இராமன் தன் மனைவியைத் தான் மீட்டுக்கொள்ள வகையின்றி, அந்தப் பெண்ணே தன்னைச் சிறை வைத்தவன்னக் கொன்றாள் என்று உலகம் கூறுமே' என அஞ்சினாள் பிராட்டி. அநுமன், நினைக்காமல் இராமனுடைய வில்லுக்கு மாசாகிவிடும் என்று இராவணனைக் கொல்ல எண்ணியபோது, அது தனக்குப் புகழாகும் என்று நினைக்கிற நினைப்பும், இங்கே சீதை நினைப்பதும் ஒரே சுருதியில் அமைகின்றன.

இந்தக் குரலை இராமனிடமே கேட்கும்படி ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்குகிறான் கம்பன்.

இராவணனுக்கு நல்லுரை கூறியும் அவன் கேளாமையால் விபீடணன் அவனை விட்டு இராமனிடம் சரண் புகுந்தான். அவன் தன் மாற்றானுக்குத் தம்பியாயிற்றே என்று கருதாமல், அடைக்கலமென்று வந்தவனை அஞ்சலென்று காத்தல் அறமென்று எண்ணி ஏற்றுக்கொண்டான் இராமன்.

பிறகு இராவணனுடைய படைபலத்தையும் இலங்கை நகரின் அமைப்பையும் பற்றி இராமன் விபீடணனை வினவினான், அவன் அவற்றை விரிவாகச் சொன்னான். அதோடு அநுமன் இலங்கைக்கு வந்தபோது போர் செய்து அட்சகுமாரன், பஞ்ச சேனாதிபதிகள் முதலியவர்களை வதைத்ததையும் இலங்கையை எரியூட்டியதையும் சொல்லி வியந்து பாராட்டினான். அநுமன், தான் புரிந்த வீரச் செயல்களை இராமனிடம் இதுகாறும் சொல்ல வில்லை, அவற்றை இப்போது விபீடணன் சொன்னபோது இராமனுக்கு வியப்பும் அநுமனிடம் பெருமதிப்பும் உண்டாயின. அவனுடைய தோள்கள் பூரித்தன. தனக்குத் தூதனாகச் சென்ற அநுமனைப் பார்க்கிறான்.

"இராவணனுடைய சேனைகளில் பாதிக்குமேல் நீ கொன்றுவிட்டாய். ஊர் முழுவதும் எரி ஊட்டி விட்டாய். இனி அங்கே என்ன இருக்கிறது? நீ செய்த காரியத்தை அடியாகக் கொண்டு புகழடைய நாங்கள் வந்திருக்கிறோம். நீ நினைத்திருந்தால் அப்போதே சீதையை மீட்டுகொண்டு வந்திருப்பாய். என் வில்லின் தொழிலைக் காட்டவே, வீரனாகிய நீ அப்படிச் செய்யவில்லை?" என்று மனமுருகிப் பேசுகிறான்.

"கூட்டி னார்படை பாகத்தின்
மேற்படக் கொன்றாய்;
ஊட்டி னாய்எரி ஊர்முற்றும்;
இனி அங்கொன் றுண்டோ?
கேட்ட ஆற்றினால், கிளிமொழிச்
சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் விற்றொழில்
காட்டக்கொல் வீர!"

"என் வில்லுக்கும் மதிப்பு இருக்கட்டும் என்று நீ விட்டு வைத்தாயோ?" என்று கேட்பதுபோல இருக்கிறது இராமனுடைய பேச்சு.

அநுமன் நினைத்த நினைப்பினும் சீதையின் நினைப்பிலும் இராமனுடைய நினைப்பிலும் ஒருமைப்பாடு இருப்பதை இந்தப் பாடல்கள் காட்டுகின்றன.

முதல் உதாரணம் இராமன் கூறிய ஒன்றை அவனைச் சார்ந்தவர்களும் கூறி ஒரே நினைப்பாக நிற்கிறார்கள் என்பதைக் காட்டும். இரண்டாவதோ மற்றவர்கள் நினைக்கும் நினைப்பை இராமனும் நினைக்கிறான் என்பதைக்காட்டுகிறது. மூல மூர்த்தியும் பரிவார தேவதைகளும் ஒரே குரலில் பேசுகின்றனர்; ஒரே நினைப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

புகழோன்

பி.சி. சீதாபதி - குறளடிமை, சேலம்.

கிட்கிந்தையின் மன்னன், வாலி. 'அவன் நான்கு வேதங்களின் கரை கண்டு அவற்றைப் பேணி வந்தான். முதிர்ந்த சிவபக்தன்; எல்லையில்லாத வல்லமை உடையவன்; தனி ஒருவனாய் நின்று பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் ஈந்தவன்; அந்த அளவிற்குப் பூமி, நீர், தீ, காற்று ஆகிய நான்கு பூதங்களும் ஒன்று கூடின வலிமை பெற்றவன்; மலைக்கு மலை தாவும் ஆற்றல் படைத்தவன் எவரேனும் தன்னுடன் பொர வந்தால் அந்த எதிரியின் பலத்தில் பகுதி தன்னை வந்தடையும் வரம் கொண்டவன்; நாள்தோறும் எட்டு திக்குகளுக்கும் பறந்து சென்று அட்ட மூர்த்திகளையும் தொழும் பக்தியாளன்: அவன் பறக்கும்வேகத்தில் காற்றுக் கூட வேகமாக வீச முடியாது; முருகப் பெருமானின் கூர்மையான வேலும் அவனுடைய மார்பில் நுழைய முடியாது; அவனுடைய நெடிய வால் சென்ற இடத்தில் கூட அந்நாளைய பெரும் வீரனான இலங்கை வேந்தன் இராவணின் ஆட்சி செல்லாது; அவன் தன்னுடைய இடத்தை விட்டு எழுகின்ற அதிர்ச்சியால் மாபெரும் மலைகளும் உதிரும்; அவன் உருவில் கோள்களும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து நிற்கும். பன்றி அவதாரத் திருமாலும், கூர்மாவதாரத் திருமாலும் இணைந்த ஆற்றலுக்குச் சமமான ஆற்றல் உடையவன்; பஞ்ச பூதங்கள் இயங்குவது அவனைக் கண்டு அஞ்சியதாலேயே என்ற அளவிற்குப் பெருமிதம் கொண்டவன்; ஆதிசேடனும் அவனுடைய போக்குவரத்தை அனுசரித்து பூமி தாழாமல் அங்கும் இங்கும் இடம் பெயர்ந்து உலகைத் தாங்குவது போல் உள்ளான்; எழுபது வெள்ளம் குரங்குப்படை கொண்டவன்; அதனால் அகில உலகமும் அவன் கருத்திற்கு மாறுபடாது; வனவிலங்குகளும் அவன் முழக்கம் கேட்டு அஞ்சும்; பெரு வலியுடைய இராவணனைத் தன் வாலில் சுற்றி வளைத்து அனைத்து உலகங்களிலும் சுற்றி வந்தவன்; பால் வெண்ணிற மேனியை உடையவன் என்றெல்லாம் அனுமன் வாலியின் பற்பல சிறப்புகளை இராமனிடம் தொடக்கத்திலேயே வர்ணித்துள்ளான்.

அத்தகைய வீரனுடன் ஒருநாள் ஓர் அவுணன் சண்டை செய்தான். இருவரும் ஒருவரை ஒருவர் ஓடி ஓடித் துரத்தி அடித்துக் கொண்டு ஒரு குகையில் நுழைந்தனர். வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனிடம் இடைப்பொழுதில் நாட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அந்த அவுணனைத் துரத்திக் கொண்டு குகையினுள் சென்றான். பல நாட்கள் அவ்விருவரும் வெளியே வரவில்லை. ஆனால், குருதி மட்டும் வெளியே ஆறெனப் பாய்ந்து வந்தது. அதனைக் கண்டு வாலி இறந்து விட்டான் என அனுமன் முதலிய அவனுடைய அமைச்சர்களும் பெரியோர்களும் முடிவு செய்தனர்.

சுக்கிரீவன், தானும் அவ்வவுணனைத் தொடர்ந்து சென்று அழிப்பதாகவும் இயலவில்லை எனில் தானும் போரிட்டு மாள்வதாகவும் கூறிப்புறப்பட்டான். ஆனால், அமைச்சராதி ஆன்றோர்கள் அவனைத் தடுத்தனர். நாடு மன்னன் இன்றி இருத்தல் கூடாது என்று வற்புறுத்தி - சுக்கிரீவனின் எண்ணத்திற்கு மாறாக - அவனுக்கு முடி சூட்டினர். அவுணன் வாராதிருக்க பிலத்தினுடைய வாயிலைப் பெரும் பாறை கொண்டு அடைத்தனர்.

சின்னாள் கழித்து அவுணனை அழித்து விட்டு வாலி வெளியில் வரலானான். வழியடைத்திருப்பதைக்கண்டான். கூவி அழைத்தும் எவரும் வராதது கண்டு சினந்து தன் காலினால் எற்றி பாறையைத் தகர்த்து எறிந்துவிட்டு வெளியில் வந்தான். சுக்கிரீவன் முடிசூடி இருக்கக்கண்டு 'வஞ்சகம்' எனத் தவறாய் எண்ணினான். அவனை ஓட ஓட விரட்டி அடித்தான். அவன் கெஞ்சினான்! உண்மை நிலையை உரைத்தான்; ஆனால், வாலி ஒப்பாது அவனை ஒழிக்க முற்பட்டான்.

அமைச்சர்கள் முதலியோர் சுக்கிரீவனுடைய பிழை ஒன்றும் இல்லை; தாங்களே அவனுடைய இஷ்டத்திற்கு மாறாக, நாட்டிற்கு மன்னன் தேவை என்ற நிலையில் அவனைக் கட்டாயப்படுத்தி மன்னன் ஆக்கியதாகக் கூறினர். மீண்டும் நாட்டாட்சியை வாலியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அவர்கள் கூறியதையும் வாலி பொருட்படுத்தவில்லை. சுக்கிரீவனைத் துன்புறுத்தி அழிக்க ஆவேசம் கொண்டான். சுக்கிரீவன் வேறு வழியின்றி, வாலி வர முடியாத ருஷ்ய முக பர்வதத்தில் சென்று ஒளிந்தான். அவனுக்குத் துணையாக அமைச்சன் அனுமனும் அங்கு சென்றான்.

அமைச்சரவையோர் எடுத்துரைத்ததையும் வாலி பொருட்படுத்தாது, அவர்களுடைய உணர்வைப் பாதித்தது நியாயமே. அவ்வாறு அவர்கள் பாதிப்பு கொள்ளவில்லையென்றால் அவர்களுடைய தன்மானத்திற்கே இழுக்குதான். அந்தத் தன்மான உணர்வுப் பொருமலால்தான் அனுமன் வாலிக்கு எதிராகச் சுக்கிரீவனுக்குத் துணையாய்ச் சென்றான். அதில் தவறு ஏதும் இல்லை.

முன்னதாக, வாலி - தாரை, சுக்கிரீவன் - ருமை ஆகிய இரு தம்பதியர்களும் கிட்கிந்தையில் ஒன்றாகவே வாழ்ந்து வந்தனர்; வாலியின் அடி பொறுக்காமல் சுக்கிரீவன் நாட்டைவிட்டு ஓடிய பொழுது தன் மனைவியையும் அவன் இழுத்துச் செல்லவில்லை என்பது உண்மையில் ஆபத்தான சூழ்நிலையினால் தான், அவளும் அவனை நாடி அப்பொழுதேயோ, அல்லது பின்னரோ சென்று சேர முயன்றதாகவும் இல்லை. வாலியோ, தன் மனைவியை நாடியாவது சுக்கிரீவன் வருவான், அவனைத் தண்டிப்போம் என்று காத்திருந்தான்.

இந்தச் சூழ்நிலையை அனுமன் இப்பொழுது புத்திசாலித் தனமாகப்பயன்படுத்திக் கொண்டான். வாலி, சுக்கிரீவனைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருவதோடு அவனுடைய 'மனைவியையும் விரும்பினான்' எனத் தன் 'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்திற்கு ஏற்ப இராமனிடம் சொல்லி வைத்தான். அப்பொழுதும் அனுமன், வாலியைக் குறிப்பிட ஏதும் கொடுமையான அடைமொழி இன்றி 'அவன்' என்றுதான் கூறினான்.

ஆனால், அச் செய்தி இராமனுக்குக் கேட்பதற்குக் கடுமையாக இருந்தது. வாலியைக் கொல்வதாகச் சூளுரைத்தான். வாலியுடன் சுக்கிரீவனை சண்டை செய்யச்செய்தான். தான் வேறு நின்று அம்பு எய்து வாலியை வீழ்த்துவதாகக் கூறினான். அந்த இடத்தில் இராமன் வாலியைக் குறிப்பிடும் பொழுது, 'வாலி என்பது ஓர் வெவ்விடம்' *(3944)* என்கின்றான். அந்த அளவிற்கு அனுமனின் சந்தர்ப்ப சூழ்நிலைக் குற்றச்சாட்டு, இராமனை சினம் கொள்ளச் செய்துவிட்டது.

அந்த ஒரு சந்தர்ப்பம் தவிர மற்ற இடங்களில் எல்லாம், வாலியை இராமன், 'வாலி' என்றே குறிப்பிடுகின்றான்.

அனுமன் வாலியை, 'இந்திரன் புதல்வன் என்னும் பரிவு இலன்' 'கொடுங்குலப் பகைஞன் ஆகிக் கொல்லிய வந்த கூற்று' 'தகை நெடும் பகைஞன் ஆம் இந்திரன் சிறுவன்' 'வெஞ்சின வாலி' என்று அவனுடைய சினத் தன்மையைக் காட்டிக் குறிப்பிட்டான் 'விரை செய்தார் வாலி என்ற அளவு இலாவலியினான்' 'வரம்பு இல் ஆற்றலான்' 'சுழலும் வேலையைக் கடையும் தோளினான்' 'மலையின் நின்று மலையின் வாவுவான் அந்தகன் தனக்கு அரிய ஆணையால் 'முரண் வலிக்கையான்' என்ற சொற்றொடர்களால் வாலியின் பெரு வலியைக் குறிப்பிட்டுக் கூறினான், 'நாலு வேதம் ஆம் நவை இல் ஆர்கலி வேலி அன்னவன்' 'சூலிதன் அருள் துறையின் முற்றினான்' அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான் என்று வாலியின் பக்தி நிலையைக் காட்டும் சொற்றொடர்களால் குறிப்பிட்டான்; 'இந்திரன் தனிப்புதல்வன்' 'இன் அளிச் சந்திரன் தழைத் தனையதன்மையான்' 'வாலி என்று ஓங்கல்' என்று வாலியின் பெருமிதம் பற்றிக் குறிப்பிட்டான்; வாலி என்று அவன் பெயரை மட்டும் குறிப்பிட்டும் காட்டினான்.

இவ்வாறு காவியம் முழுவதிலும் வாலி மேல் வெறுப்புணர்ச்சி தோன்றாமல் பேசும் அனுமன் ஒரே இடத்தில், 'கொடுந் தொழில் வாலி' என்று இராமனிடம் குறிப்பிடுகின்றான். வாலியின் பெருமைகளையே குறிப்பிட்டு இராமனிடம் பேசிய அனுமன், தான் கூறிய 'ருமை' செய்தியால் இராமன் வாலியைக் கொல்வதாகச் .சொன்னதை, வாலி - சுக்கிரீவன் போர்ச் சூழலில் மறந்துவிடக்கூடாது என்பதனால் அந்த சொற்றொடரைக் கையாண்டான். வாலி மாளவேண்டும் என்ற தன் எண்ணம் நிறைவேறப் பெற்றான்.

இராமன், அனுமன் இருவரைத் தவிர பிற பாத்திரங்கள் எல்லாம் வாலியைக் குறை கூறிக் குறிப்பிடவில்லை. சுக்கிரீவன் வாலி தன் மேல் கொண்டுள்ள பகைமையைக் காட்டி, 'கருவு உடைய வாலி' என்று ஒரு முறை குறிப்பிட்டான்; பிற இடங்களில், 'முன்னவன் 'கொற்ற வாலி' 'வாலி' என்றுதான் குறிப்பிட்டான்.

தாரை, தன் கணவனை விளிக்கும் பொழுது, 'செயிர் தீரா விதி ஆன தெய்வமே. 'செரு ஆர்தோள! 'எந்தாய்! என்று குறிப்பிடுகின்றான்; பிற இடங்களில், 'வாலி என்று குறிப்பிடுகின்றாள்.

வானர வீரர்களோ, 'வாலி காலன்' என்று அவனுடைய வலிமையால் வந்த அச்சங்காட்டிப் பேசினர்.

இராவணனும் 'வாலி' என்றுதான் குறிப்பிடுகின்றான்.

அங்கதனோ, தன் தந்தையை 'இந்திரன் செம்மல்' என்றான்.

இவ்வாறெல்லாம் தன் காவியப் பாத்திரங்கள் வாயிலாக வாலியைக் குறிப்பிட வைத்துள்ள கம்பர் தம் கவிக் கூற்றாக அவனை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்.

'வாலி' என்றும் 'அடுதிறல் வாலி' என்றும் 'அமளிமேல் ஒரு பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான்' என்றும், 'வரைத் தடம் தோளினான்' என்றும் 'இறுதி ஊழியில் யொழுந் திரைக் கடல் கிளர்ந்தணைய, கொள்கையான்' என்றும், 'கடலின் தான் கடை ஆலமும் ஒத்தனன்' என்றும், 'இந்திரன் புதல்வன்' 'இந்திரற்கு மகன்' என்றும், 'போர் வாலி' என்றும், 'ஆளிபோல் வாலி' என்றும், 'வாசத்தாரவன்' என்றும், 'செங்கண் வாலி' என்றும், 'அரி குலத்து அரசு, கவி குலத்து அரசு, திண் தோள் குரக்கு இனத்து அரசன்' என்றும், 'கால வாலி' என்றும், வன் திறல் வாலி என்றும் சாதாரணமாகவோ, அவனுடைய போர் வலி ஆற்றலின் அடிப்படையில் அடைமொழிகளைச் சேர்த்தோதான் ஈரிடங்களைத் தவிர மற்றெல்லா இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

இவை அனை த்தையும் இணைத்து ஓரிடத்தில் மட்டும்,

"வீரரை யாரோ வியவாதார்?"

என்று வியந்து போற்றியுள்ளார்.

இவையன்றி வாலியைக் கவிச் சக்கரவர்த்தி இரண்டே இடங்களில் நேரடியாகப் புகழ்ந்துள்ளார். தன். கூற்றாய் அவர் அவனைக் குறை கூறியோ, இகழ்ந்தோ, பாடினார் இல்லை.

ஓரிடத்தில் அவனைச் 'சிறியன் சிந்தியாதான்' எனப் புகழ்ந்துள்ளார். ஆம்; அவன் அனுமனால் வீண் பழிக்கு ஆளாக்கப்பட்டு இராமனால் மறைந்திருந்து கொல்லப்பட்டான். (இதனுடைய முழு விளக்கத்தை எமது வாலி வழக்கில் தீர்ப்பு என்ற நூலில் காண்க) இராமன் தன் சுய உருவைக் காணும் (திருமால் எனும் தெய்வப் பார்வை) ஞானத்தைக் கொடுத்ததால் நடந்தது அனைத்தையும் மறந்தவன் போவே, தானே, 'தீயன பொறுத்தி' என இராமனிடம் வேண்டுகின்றான். 'வாலி நல்லவன்; கீழ்மையான எண்ணங்களை ஏற்க மாட்டான்; அவன் தன் தம்பி மீது சினம் தணியாத நிலை தவறே! ஆனால், அதற்குத் துணையாக அனுமனால் கற்பிக்கப்பட்ட - ருமையின் அடிப்படையிலான குற்றச் சாட்டு கற்பனையானதே! என கூறுவார் போலே இச் சொற்றொடரைக் கையாண்டு அவனுடைய பெருந்தன்மையைப் புகழ்ந்து, அவனுக்கு சாட்சியம் நிற்கின்றார்.

'இந்திரன் இராவண வதத்திற்காக உலகில் வாலியாகத் தோன்றியவன். தான் வந்த காரியத்தை மறந்து யாருக்கு விரோதியாக வேண்டுமோ அவனுடனேயே கூட்டு சேர்ந்து விட்டான். அதனால், அவன், இராம இராவணப் போரில், இராவணனுக்குத் துணையாக இராவண்ணம் அவன் அழிக்கப்பட வேண்டியவன் தானே?

ஒரு நடிகனை ஒரு குறிப்பிட்ட வேடத்திற்கு நாடக இயக்குனர் அனுப்புகின்றார். அவன் மேடைக்குச் சென்று வேறு விதமாக உரையாடி நடிக்கின்றான். அவனை அந்த இயக்குனர் திரை மறைவில் நின்று இழுத்துக் கொள்வாரா, இல்லையா? அது போலத்தான், இராமனாகிய இயக்குநர் வாலியாகிய நடிகனை மறைந்து நின்று கொன்றார்.

இது சொற் சாதுரியம் வல்ல பெரும் பேச்சாளர்கள் நம்மைச் சமாதானப் படுத்தக் கூறும் உவமை. இந்த உவமையின் அடிப்படையில் கோளாறு இருப்பதைக் கேட்போரும் புரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ள முயலாமல் அல்லது புரிந்து கொண்டால் பெரியவர்களுடைய கருத்துக்கு மாறுபட வேண்டி வருமே என்று அஞ்சி தலையாட்டி பொம்மைகளாய் ஆமோதித்து விடுகின்றனர்!

இராமன் இயக்குநரா? அவனும் ஒரு நடிகன்தானே? இந்திரன் ஆகிய வாலியும் ஒரு நடிகன். இவர்களை இயக்குபவனோ முழுமுதற் பொருளாகிய திருமால். அவனே தான் இராமனாக வந்துள்ளான் என்றாலும், அவன் தன்னைத்தானே அவதாரப் புருஷன் என்று உணர்ந்து கொள்ளவே இல்லை என உரைப்பவர்கள் இங்கே மட்டும் அவனைத் திருமால் என்னும் இயக்குநராக எப்படி ஏற்க முற்படுகின்றனர்? அப்படியே அவனை இயக்குநராக ஒப்புக் கொண்டாலும், அவனுடைய பணி என்ன? மறைவிலிருந்து அந்த நடிகனைத் திருத்த முயலவேண்டும்; இயலாது போனால் திரைச்சீலையை கீழே விட்டுத் தாழ்த்தி நாடக மேடையையே பார்வையாளர்கள் கண்களிலிருந்து சிறிது போழ்து மறைந்து, அவனைச் சீர் செய்து - அல்லது அவனுக்கு மாற்றாக பிறிதொரு ஆளை நடிகனாக நியமித்து - நாடகத்தை முழுமையாக்க வேண்டுமேயன்றி, குறையாக அவன் நடிப்பதாக நினைத்துக் கொண்டு பிறர் சொற்கேட்டதின் விளைவாய் - அவனை மாய்த்தே தீர்வதா? அப்படி மாய்ப்பதானாலும், அடிபட்டவனிடம் நாடக மேடையிலேயே நியாயம் பேசிக் கொண்டிருந்தால் அந்த நடிக இயக்குநர் மட்டும் பார்வையாளர்களிடமிருந்து தப்ப முடியுமா?

'ஒரு நடிகனை ஒழுங்காகத் தயார் செய்ய முடியாத இயக்குநரின் திறம் என்ன? அவனை அப்போதைக்கப்போது நினைவு படுத்தித் தன் பாத்திரத்தைச் சரிவர நடிக்கச் செய்யாமல் கடைசி நேரத்தில் கடிந்து தள்ளுவது என்ன முறை? அவ்வாறு செய்ததும் அன்றி நம் கண் எதிரிலேயே அவர்களுக்குள் வாக்கு வாதம்வேறா? என்றெல்லாம் ஏசாரோ?

ஆகவே, மனித இராமன், விலங்கு வாலியை மறைந்திருந்து கொன்றது உலகியல் நடைமுறைப்படி நியாயமானது அன்று என்றுதான் மனோ சாட்சிக்கு விரோத மின்றிப் பேசுபவர்கள் கூற முடியும்.

இதனைத் தான் கவிச் சக்கரவர்த்தி கம்பரும் வெளிப்படுத்த முயன்றார். என்றாலும், பிற்காலத்து இலக்கியவாணர்கள் தங்களுக்கு இடையே சொற்சிலம்பம் ஆடி மகிழ்வுற வேண்டித் தம்கருத்தை மறைமுகமாக ஒரு சொல்லால் மூடி மொழிந்துள்ளனர்!

'தன் மார்பில் பாய்ந்த அம்மைத் தடுத்து நிறுத்தினான். அதனில் பொறித்துள்ள பெயரைக் காண முற்பட்டான் வாலி' என்பதைக் கூற வந்தவர் அவனைப் 'புகழோன்' என்னும் பெருமிதச் சொல்லால் குறிப்பிடுகின்றார்! அவரும் வாலியின் செயல் தீராப் பழியுடைத்து காமத்தின் பாற்பட்டது என்று கருதியிருப்பாரேயானால் அவனுக்குப் புகழுரை சூட்டுவாரோ? அதிலும் அந்தச் சூழ்நிலையில்.

"குப்புசாமியின் தந்தை கிருஷ்ணசாமி. அவர் 'சீர்திருத்தம்' என்ற நாடகத்தில் நடிக்கிறார். அவர் ஏற்கும் பாத்திரத்தின் பெயர் 'சர்வோத்தமன்'. அந்த சர்வோத்தமன், 'அப்பாவி' என்ற பாத்திரத்தைச் சூழ்நிலை காரணமாகக் கொலை செய்து விடுகின்றான்.

இந்தக் காட்சியைக் குப்புசாமி பார்க்கிறான். வீட்டிற்கு வந்து தன் அப்பாவைக் கொலைக்காரன் என்றால் அது அவனுடைய அறியாமையைக் காட்டும்.

அதேபோல், அவன் நாடகத்தில் 'சர்வோத்தமன் கொலைகாரன் அல்ல; கொன்றது என்பது மட்டும் அல்ல 'சர்வோத்தமன்' என்ற பெயர் வேறு அமைந்துள்ளது அத்தகையவர், அந்த ' அப்பாவியின்' உயிரைப் போக்கினால் அவரை 'கொலைகாரன்' என்று சொல்லக் கூடாது என்று சொன்னால் அது அவனுடைய அறியாமையின் ஆழத்தைக் காட்டும்.

எனவே, அவன், கிருஷ்ணசாமியை வீட்டில் தந்தையாக தக்க மரியாதை தரவும், நாடகத்தில் நடிகனாக கொலைக்காரன் பாங்கில் பார்த்து ரசிக்கவும் வேண்டும்.

இவ்வாறான ஒழுங்கு நிலை சமப்பார்வை ஏற்கத் தெரியாதவர்கள் தெரிந்தாலும் அவ்வாறு கருதத் தயங்குபவர்கள் தான். இராமன் 'இராமாயண' நாடகத்தில் அவன் வாலியைக் கொன்றதைத் தவறாக ஏற்கும் மனோ தைரியம் இன்றி இருப்பர். இராமனின் மூலமான 'திருமாலை' நினைந்து வாலியின் மூலமாக 'இந்திரனைக்' கொன்றது சரி என்பர். அவர்கள் திருமால் இராமன் வேடத்தில் நடிப்பதைப் புரிந்து கொண்டு புகழத் தெரியாதவர்களே!

முறைப்படி நியாயமானது அன்று என்றுதான் மனோ சாட்சிக்கு விரோதமின்றிப் பேசுபவர்கள் கூறமுடியும்!

இதனைத்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் வெளிப்படுத்த முயன்றார் என்றாலும், பிற்காலத்தில் இலக்கியவாணர்கள் தங்களுக்கு இடையே சொற் சிலம்பம் ஆடி மகிழ்வுற வேண்டித் தன் கருத்தை மறைமுகமான ஒரு சொல்லால் மூடி மொழிந்துள்ளனர்!

'தன் மார்பில் பாய்ந்த அம்பைத் தடுத்து நிறுத்தினான்; அதனில் பொறித்துள்ள பெயரைக் காண முற்பட்டான் வாலி, என்பதைக் கூற வந்தவர் அவனைப் 'புகழோன்' என்னும் பெருமிதச் சொல்லால் குறிப்பிடுகின்றார். அவரும் வாலியின் செயல் தீராப் பழியுடைத்து காமத்தின் பாற்பட்டது என்று கருதியிருப்பாரேயானால் அவனுக்குப் புகழுரை சூட்டுவாரா? அதிலும் அந்தச் சூழ்நிலையில்.

எனவே, வாலியென்றும் சிறியன சிந்தையாதானைப் பற்றித் தன்னுடைய மேலான கருத்தை வெளிப்படுத்தவே அவனைப் 'புகழோன்' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பட்டுள்ளார் கம்பர் என்பதை அறிவு பூர்வமாக - வாத பூர்வமாக - மனோதத்துவ நிலையிலான - வேண்டுதல் வேண்டாமை இல்லா நோக்கோடு - சீர்தூக்கிச் சமன் செய்யும் கோல்போல் நாம் உணர்தல் வேண்டும்.